# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 29 வியாழக்கிழமை (12-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:78


# தமிழ்க் கூட்டமைப்பின் கூட்டுப் போட்டி திட்டத்துக்கு நல்ல வரவேற்பு இல்லை

## மலையகத்தில் ஆறுமுகத்தின் இ.தொ.காவும் கொழும்பில் கணேசன் கட்சியும் ஒதுங்குகின்றன

கொழும்பு,பெப்ரவரி12

**நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து கூட்டாகப் போட்டியிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முன் வைத்திருக்கும் திட்டத்திற்கு எதிர்பார்த்த நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. மலையகத்தின் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்துபோட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்று உறுதிபடக் கூறிவிட்டது. கொழும்பிலிருந்து இயங்கும் மனோகணேசன் கட்சியான மேல்மாகாண மக்கள் முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் செயற்பட முடியாது என்று தெரிவித்திருக்கிறது.**

அமைச்சர் சந்திசேகரனின் மலையக மக்கள் முன்னணி மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் கட்டாயம் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகிறது.

இலங்கைவாழ் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்பதை இந்தப் பொதுத்தேர்தல் மூலம் உலகறியச்செய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவேண்டும். அதன் மூலம் அரசியல்பலத்தைத தேடிக்கொள்ளவேண்டும். இவற்றை அடைவதற்குத் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து போட்டியிடுவதே சிறந்தவழி என்கிறது தமிழ்த தேசியக் கூட்டமைப்பு.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்தக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளும் மலையக தமிழ்மக்களின் பிரச்சினைகளும் வெவ்வேறானவை. தமிழ்த் தேசியக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு மல்வத்த பீடாதிபதி கடும் ஆட்சேபம்?

கொழும்பு,பெப்.12

நாடு அரசியல் நெருக்கடியாலும் பொருளாதாரத் தேக்கத்தினாலும் தடுமாற்றம் அடைந்துள்ள இந்த வேளையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தது எந்த வகையிலும் பொருத்தமற்ற செயலாகும் என மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல விபஸி தேரர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் நிருபம் சென், நேற்றுக்காலை கண்டிக்கு விஜயம் செய்தபோது அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்தார்.

அஸ்கிரிய பீடாதிபதி உடகம புத்திரகித்த தேரர், தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்; நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அரசியல் விவகாரம் தொடர்பாகவோ, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பாகவோ

(18ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியிலிருந்து விலக மொறகொட தயார்!

கொழும்பு,பெப்.12

பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட தமது அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான அவர், தற்போது நிலவும் சூழ்நிலையில் அமைச்சுப் பதவியொன்றை வகிப்பதன் மூலம் நாட்டினதும் மக்களினதும் நன்மைக்காக எதுவும் செய்யமுடியும் என்று தாம் கருதவில்லை எனவும் -

அதனால், இந்த முடிவைத் தாம் எடுத்தார் எனவும் - பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் பட்டியலில தமக்கு வாய்ப்புக் கிடைத்தால் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்குத் தாம் தயாராக இருக்கின்றா எனவும் -

தம்மீது பிரதமர் வைத்த நம்பிக்கைக்கு தாம் நன்றிதெரிவிக்கிறார் எனவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தெற்கு அரசியல்வாதிகள் தங்களின் பொறுப்பை உதாசீனப்படுத்துகின்றனர்

### நெதர்லாந்தில் தமிழ்ச்செல்வன் கருத்து

ஹேக்,பெப்.12

இலங்கையில் தற்பொழுது நிலவும் சமாதானச் சூழ்நிலையைக் குழப்ப விடுதலைப் புலிகள் தயாராக இல்லையென புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார். சமாதான முயற்சியில் ஒருதரப்பாகத் தொடர்ந்திருந்து புரிந்துணர்வு உடன்படிக்கையைப் பின்பற்றி நடக்க விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் அவர், நெதர்லாந்தின் தலைநகரான ஹேக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே இவற்றைக் கூறினார்.

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் அதிகாரப் போட்டியால் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியாதிருப்பதாகவும் குறிப்பிட்ட அவர், தெற்கின் அரசியல்வாதிகள் தன்னிச்சையாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு தங்களின் பொறுப்பையும் கடமைகளையும் உதாசீனப் படுத்துகின்றனர் எனவும் கூறினார்.

"எவ்வாறாயினும் மக்களின் ஆணையைப் பெறும் ஒரு அரசு தெரிவுசெய்யப்படுமேயானால் அந்த அரசுடன் தொடர்ந்து ஒத்துழைத்து சமாதானப் பேச்சுக்களை நடத்த நடவடிக்கை மேற்கொள்வோம். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே நெருக்கடி நிலவுகிறது.

இந்தநிலையில், நாட்டில் திடீர் பொதுத்தேர்தலை நடத்துவது ஒரு போதும் உகந்ததல்ல என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும் எனவும் தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

## புரிந்துணர்வு உடன்படிக்கை 2 ஆண்டுகள்; பூர்த்தி தினத்தில் ஐ.தே.க. தேசிய மாநாடு

கொழும்பு,பெப்.12

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்தாகி இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடையும் தினமான எதிர்வரும 22ஆம் திகதி ஐ.தே.கவின் தேசிய மாநாடு நடைபெறும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இம்மாநாட்டை கொழும்பில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.தே.கவின் தேசிய மாநாடு டிசெம்பர் மாதத்தில் நடைபெறுவதே வழக்கமாகும். ஆயினும், எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுவதால் தேர்தலுக்கு முன்னரே மாநாட்டை நடத்த ஐ.தே.க. ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வரும் வேட்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் உட்பட பெருந் தொகையான கட்சித் தொண்டர்கள் மாநாட்டில் பங்குபற்றுவர் எனத் தெரி

(18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் வாஷிங்ரனில் திட்டமிட்டபடி நடைபெறும்

வாஷிங்ரன்,பெப்.12

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் வாஷிங்ரன் கூட்டம் திட்டமிட்டபடி எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறும். அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி, நோர்வே பிரதிவெளி விவகார அமைச்சர் விடார் ஹெலகிஸன், ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதிநிதி இயக்குநர் நாயகம் ஜவ்ஜின் ஆகியோரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இக்கூட்டத்துக்கு ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தலைமை வகிப்பார்.

இலங்கையின் சமாதான முயற்சியில் இன்றைய நிலை, தெற்கிலுள்ள அரசியல் நெருக்கடி என்பன குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான திகதியை நிர்ணயிப்பதில் பெரும் சிக்கல்

### இன்று இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படலாம்

கொழும்பு,பெப்.12

ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையை நடத்தும் திகதியை நிர்ணயிப்பதில் பெரும சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பொதுத் தேர்தல், வடமேல் மாகாண சபைத் தேர்தல், பாடசாலை விடுமுறை ஆகியவை காரணமாகவே இப்பரீட்சையை எத்திகதியில் நடத்துவது என்பதை பரீட்சைத் திணைக்களம் நிர்ணயிக்க முடியாதிருந்து வருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டதையடுத்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடத்தும் தினம் ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டது.

ஆயினும், வடமேல்மாகாண சபைத் தேர்தலை ஏப்ரல் 24ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று தேர்தல் திணைக்களம் கூறியிருப்பதால், ஏப்ரல் 19ஆம் திகதியிலும் பரீட்சையை நடத்துவது பிரச்சினையாகியுள்ளது.

எவ்வாறாயினும், இப்பரீட்சைக்கான திகதி குறித்து இன்று இறுதித்

(18ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த விடயங்களை கையாள ஆலோசனைக் குழு

### ஜனாதிபதி முன்வைக்கும் யோசனை

போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கான சரியான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆலோசனை தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன்ட் புரூஹெறவ்டே நேற்று ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்தபோது ஜனாதிபதி இந்த யோசனையைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் உட்பட பலர் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத்தளபதிகள், பிரதமரின் கீழுள்ள சமாதான செயலகத்தின் உறுப்பினர்கள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்ட குழுவொன்றை அமைக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இந்தக்குழு காலத்துக்குக்காலம் கூடி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உரிய ஆலோசனைகளை வழங்க முடியும் என்று ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார்.

பக்கச்சார்பாக நடந்துகொண்ட காரணத்துக்காகவே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரை அப்பதவியை விட்டுச் செல்லுமாறு தாம் கோரினார் என ஜனாதிபதி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவரிடம் தெரிவித்தார்.

### இடைக்கால உத்தரவு வழக்கு முடியும் வரையான கட்டளையாக நீடிப்பு

கொழும்பு,பெப்.12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் ஆலோசனையின்றி கட்சியின் மத்திய குழுவினரோ அல்லது வேறு குழுவினரோ கூட்டங்களைக் கூட்டக் கூடாது என்று தான் விதித்து வந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

### சுதந்திர முன்னணியில் ஜே.வி.பிக்கு 42 இடங்கள்

கொழும்பு,பெப்.12

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களாகப் போட்டியிட ஜே.வி.பிக்கு 42 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று சு.க. பொதுச். செயலாளர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்திருக்கிறார்.

சு.க.-ஜே.வி.பி. பேச்சில் இணங்

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கான புதிய கட்டடம் நேற்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோயிலில் இடம்பெற்ற வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமிப் படங்கள் ஊர்வலமாகப் புதிய பணிமனைக்கு எடுத்துவரப்படுவதையும், விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் கண்ணன், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சித் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், முதன்மை விருந்தினரான யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் நாடா வெட்டி பணிமனையைத் திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் மற்றும் கிராம அலுவலர்கள், உதவி அரசஅதிபர் பணிமனையின் அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோரும் படங்களில உள்ளனர்.

(அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவி நீக்கம்

கொழும்பு,பெப்.12

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் [illegible] அந்தஸ்தில்லாத 27 அமை[illegible]களும், 12 பிரதியமைச்சர்களும் [illegible] ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்[illegible]னால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

இதற்கான உத்தரவைப் பிறப்பித்த ஜனாதிபதி, அந்த அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் பயன்படுத்தும் அரச வாகனங்கள் அனைத்தையும் பொறுப்பேற்கும்படி அதிகாரிகளைப் பணித்திருக்கிறார். (ஐ-8)

## திருகோணமலையில் டெங்கு பரவுகிறது

திருகோணமலையில் 'டெங்கு' காய்ச்சல் பரவுகிறது. இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தேவாலய வீதி, உவர் மலை, சீனன்குடா, ஐயனார் வீதி ஆகிய இடங்களில் டெங்கு காய்ச்சல் பரவியுள்ளது. திருமலை கடற்படைத் தளத்தில் நான்கு பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். கந்தளாயிலும் டெங்குக் காய்ச்சல் பலருக்குப் பீடித்துள்ளது.

# தமிழர் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி தலைமைகளின் கீழ் செயற்பட மாட்டோம்!

## மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு,பெப்.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் நேரடித் தலைமையின்கீழ் மேல்மாகாண மக்கள் முன்னணி செயற்பட முடியாது என்று அம்முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறுகிறார். வடக்கு -கிழக்கு, மலையகம் ஆகிய பிராந்தியங்களைப போன்று மேல் மாகாணத்தையும் ஓர் அரசியல் பிராந்தியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதவேண்டும் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பாக விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவற்றைக் கூறியிருக்கும் அவர், மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் இணைந்து கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ் மேல் மாகாண மக்கள் முன்னணியும் தேர்தலைச் சந்திக்கவேண்டும் என்ற கருத்து கூட்டமைப்பினரால் முன வைக்கப்பட்டிருக்கிறது. அனைத்து இலங்கைத் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்ற கொள்கையில் மேல்மாகாண மக்கள் முன்னணி எப்போதுமே உறுதியாக நிற்கிறது. இன்றைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அடித்தளமிட்ட முன்னைய 10 தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் நாம் தீவிரமாகச் செயற்பட்டு வந்தோம்.

தனித்து உதயசூரியன் சின்னத்திலோ, ஏணி சின்னத்திலோ அல்லது ஐக்கிய தேசிய முன்னணியின் யானைச் சின்னத்திலோ போட்டியிடுவது சம்பந்தமாக நாம் இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை. எது எப்படியிருந்தாலும் மேல் மாகாண பிராந்தியத்தின் அரசியல் யதார்த்தங்களை அங்கீகரிக்கும் ஒரு நிலைப்



பாட்டிற்கே நாம் உடன்பட முடியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அல்லது மலையக மக்கள் முன்னணி ஆகியோரது நேரடித் தலைமையின் கீழ் நாம் செயற்பட முடியாது. உத்தேச தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது வடக்கு - கிழக்கு, மலையகம் ஆகிய பிராந்தியங்களைப் போல் மேல் மாகாணப் பிராந்தியத்தையும் ஓர் அரசியல் பிராந்தியமாகக் கருதவேண்டும். இத்தகைய ஓர் அங்கீகாரமும், புரிந்துணர்வும் மேல்மாகாண மக்கள் முன்னணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இருக்கிறது என்பதை இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகிறேன்.

சில அரசியல் கட்சிகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள உள்ளூர் அரசியல் நெருக்கடிகளுக்காக எம்மை எவரும் நிர்ப்பந்தப்படுத்த முடியாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சிகளுடன் எமக்கு எப்போதும் நல்லுறவு இருக்கிறது. அந்த அடிப்படையில் எமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை ஏற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முக்கியஸ்தர்களை மேல் மாகாண மக்கள் முன்னணி சந்தித்துப் பேசும். எனினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இவ்வார இறுதியில் நாடு திரும்பிய பின்னர் அவருடன் உரையாடவுள்ளோம். இதன்பின்னரேயே இது சம்பந்தமாக பரஸ்பர உடன்பாட்டுக்கு மால் வரமுடியும்.

இன்றைய நிலையில் சமாதான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக ஐக்கிய தேசிய முன்னனியில் அங்கம் வகிக்கும் கட்சி என்ற முறையில் நாம் கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தேர்தலை சந்திக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

எனவே, கொழும்பு மாவட்டத்தை மையமாக வைத்து மிகுந்த நம்பிக்கையுடன் நாம் கட்டிவரும் சக்தி மிக்க தமிழர் அரசியல் அணியை சிதறடித்து விடவேண்டாம் என தமிழத் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளிடமும், மலைநாட்டு கட்சிகளிடமும் நாம தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- இவ்வாறு அவர் தெரிவிக்கின்றார். (ஐ)

# இணைந்து போட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார் யோகராஜன்

கொழும்பு,பெப்.12

"வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் வேறு; மலையக மக்களின் பிரச்சினைகள் வேறு. இவற்றை ஒரே பார்வையில் நோக்க முடியாது. அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதைத் தவிர்த்து தேசிய கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்" என்று இ.தொ.கா. உப தலைவர் இரா.யோகராஜன் கூறினார்.

நேற்றுக்காலை கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்த அவர், எந்தக்கட்சி வெற்றி பெறுகின்றதோ அதனோடு இணைந்து கொள்வோம் என்று இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் பி.பி.ஸிக்குத் தெரிவித்த கருத்தையும் நிராகரித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தேர்தல் அறிவிக்கப்பட்டபின் பல அரசியல் வாதிகளும் பேரம் பேசும் நோக்குடன் பல கருத்துக்களை வெளியிடுவது சகஜம். எங்களுடைய கட்சி இறுதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்குமுன் கூறப்பட்ட கருத்து, இப்பொழுது உத்தியோகபூர்வமாக ஐ.தே. முன்னணியுடன் இணைந்தே போட்டியிடுவது எனக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமா ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தினோம். மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, வீடமைப்பு, அரச தொழில் வாய்ப்பு தொடர்பாக நாம் முன்வைத்த மூன்று கோரிக்கைகளையும் பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே, நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவோம் எனத் தீமானித்து விட்டோம். இதில் மாற்றம் இல்லை.

- இவ்வாறு அவர் கூறினார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் 'ஒன்றுபடுவோம் வாருங்கள்' என உங்களுக்கு இரண்டாவது கடிதத்தையும் எழுதி உள்ளார். தமிழர் என்ற அடிப்படையில இந்தக் கூட்டில் சேர உங்களுக்கு தடையாக இருப்பது என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

நாம் கூறவேண்டியதை ஏற்கனவே கூறிவிட்டோம். சந்திரசேகரனின் கடிதங்களுக்குப் பதில் அளித்துக் கொண்டிருப்பது பிரயோசனமற்றது என்பதோடு சந்திரசேகரனை நம்ப நாம் தயாராக இல்லை என்றும் யோகராஜன் பதிலளித்தார். (ஐ)

# நீதியான தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழர் கூட்டமைப்புக்கு 20 இடங்கள்

## அம்பாறை மாவட்ட கூட்டணி உறுப்பினர் ஹேஷ்யம்

எதிர்வரும் பொதுத்தேர்தல் நீதியாக, நியாயமாக நடந்தால் வடக்கு - கிழக்கில் தமிழர் தேசியக் கூட்டமைப்பிற்கு இருபது இடங்கள் கிடைக்குமென்று அம்பாறை மாவட்ட சிரேஷ்ட தமிழர் கூட்டணி உறுப்பினர் ஒருவர் ஹேஷ்யம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 உறுப்பினர்களும், வவுனியா மாவட்டத்தில் 5 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பேரும் திருமலை, அம்பாறை மாவட்டங்களில் தலா ஒரு பிரதிநிதியுமாக 20 பேர் தெரிவு செய்யப்பட வாய்ப்புண்டு என்று அவர் மேலும் கூறினார்.

தமிழர்களின் ஒன்றுமையை சர்வ தேசத்திற்கு எடுத்துக்கூறும் ஒரு களமாக இத்தேர்தல் பயன்படும் என்று அழுத்திக் கூறிய அவர், "விடுதலைப் புலிகளின் தியாகத்தை மதித்து தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பும் எந்த அரசுடனும் பேச்சுக்கள் நடத்தவும் இத்தேர்தல் களம் அமைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது" எனவும் குறிப்பிட்டார்.

# 'அம்டா' நிறுவனம் தனது பணிகளை இடைநிறுத்தியது

யாழ்ப்பாணம்,பெப்.12

ஆசிய அபிவிருத்திச் சங்கத்தினால் (அம்டா) குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமூக அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த மாதம் முதல் இடைநிறுத்தப்படவுள்ளதாக சங்கத்தின் யாழ்.மாவட்டத் திட்ட இணைப்பாளர் கிறோயுக்சி ஒக்கா சாக்கி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நிறுவனம் யுத்தத்தால் நலிவடைந்துள்ள - அடிமட்ட மக்களின் கிராமிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கடந்த வருடம் தென்மராட்சிப் பகுதியில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

அதேபோல, இவ்வருடமும் வேறு சில பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கென திட்டங்களைத் தயாரித்து தலைமைப்பீட அங்கீகாரத்திற்காக அனுப்பி வைத்திருந்தோம்.

ஆனால், மேற்படி திட்டங்களுக்கான நிதி உதவி எதனையும் ஜப்பான் அரசு ஒதுக்கீடு செய்யாததனால் யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு திட்டத்தையும் புதிதாக ஆரம்பிக்க வேண்டாம் என தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது.

அதனை அடுத்து தற்போது மேற்கொள்ளப்படும் திட்டங்களை மார்ச் மாதத்துக்குள் நிறைவு செய்து எமது அலுவலகத்தை மூடவுள்ளோம் - என்றார் அவர். (எ-5)

## உபகரணங்கள் அன்பளிப்பு

வலிகாமம்தெற்கு,பெப்.12

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கலையரங்கில் அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களின் வலய ரீதியான கருத்தரங்கின்போது தீவக வலயத்துக்கென பத்தாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு தலைநகர லயன்ஸ் கழகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இவ்வுபகரணங்கள் தீவக லயன்ஸ்கழகத் தலைவர் லயன்.எம். மகேந்திரனிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-152)

# கொழும்பு - கம்பஹா - ஒவ்வொன்று குறையும் குருநாகல், புத்தளம் - ஒவ்வொன்று கூடும்

## நாடாளுமன்ற எம்.பிக்கள் எண்ணிக்கையில் மாற்றம்

கொழும்பு,பெப்.12

எதிர்வரும் பொதுத்தேர்தலில் குருநாகல், புத்தளம் ஆகிய இரு மாவட்டங்களுக்குமான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தலா ஒன்றால் அதிகரித்துள்ளது. அவ்வாறே, கொழும்பு, கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தலா ஒன்றால் குறைந்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

பொதுத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை, நியமனப்பத்திரங்கள் பட்டியலில் இடம்பெறவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை தேர்தல் ஆணையாளர் விசேட வர்த்தமானியில் அறிவித்திருக்கிறார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வருமாறு:-

கொழும்பு - 20, கம்பஹா - 17, களுத்துறை - 10, கண்டி - 12, மாத்தளை - 5, நுவரெலியா - 7, காலி - 10, மாத்தறை - 8, அம்பாந்தோட்டை - 7, யாழ்ப்பாணம் - 9, வன்னி - 6, மட்டக்களப்பு - 5, திகாமடுல்ல - 4, திருகோணமலை - 4, குருநாகல் -16, புத்தளம் - 8, அநுராதபுரம் - 8, பொலன்னறுவை - 5, பதுளை - 8, மொனறாகலை -5, இரத்தினபுரி - 10, கேகாலை - 9.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் வாக்காளர் எண்ணிக்கைக்கு ஏற்ப நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டாலும் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் மொத்த உறுப்பினர் தொகையில் மாற்றம் ஏற்படமாட்டாது என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறினார். (ஐ)

# மற்றொரு குண்டுத் தாக்குதல்; ஈராக்கில் 36 பேர் மரணம்!

பக்தாத்,பெப்.12

ஈராக்கில் தற்கொலைப் படையினர் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் இராணுவத்தில் சேர இருந்த 36 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

பக்தாத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ ஆள்சேர்ப்பு மையத்தின் அருகே புதன்கிழமை காலை 9 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

பக்தாத்தில் செவ்வாய்க்கிழமை இஸகான்தாரியா பொலீஸ் நிலையம் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடந்ததில் 55 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் பொலீஸில் வேலை தேடிவந்தவர்கள். இச்சம்பவம் நடந்த 24 மணி நேரத்திற்குள் மீண்டும் கார் குண்டுத் தாக்குதல் நடந்துள்ளது.

500 இறாத்தல் வெடிமருந்துகள் நிரம்பிய காரை ஓட்டிவந்த நபர், இராணுவ ஆள்சேர்ப்பு மையத்தின் அருகே அதனை வெடிக்கச் செய்தார். இதில் 36 பேர் உயிரிழந்தனர் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ரால்.்ப் பாகர் தெரிவித்தார்.

(ஐ)



ஈராக்கில் நேற்றுத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தைச் சோதனையிடும் அமெரிக்கப் படையினர்.

# தெற்கு மாநிலங்களிலும் ஜோன் கெரி பெருவெற்றி!

## புஷ்ஷை எதிர்க்கப் பலமான போட்டியாளர் உருவாகிறார்

பெயர்பக்ஸ்,பெப்.12

எதிர்வரும் நவம்பரில் அமெரிக்காவில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும், குடியரசுக் கட்சி வேட்பாளருமான ஜோர்ஸ் டபிள்யூ புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிடப் போகும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பெரும்பாலும் செனட்டர் ஜோன் கெரிதான்.

நேற்று இரண்டு தெற்கு மாநிலங்களில் அவருக்குக் கிடைத்த எதிர்பாராத பெரும் வெற்றிகள் அவரது நிலைமையைப் பெரிதும் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

அமெரிக்காவின் வடகிழக்கு மாநிலமான மசாசூசெட்ஸ் ஆளுநர் செனட்டர் ஜோன் கெரி.

இதுவரை வடக்கை அண்டிய மாநிலங்களில் இடம்பெற்ற உட்கட்சித் தேர்தல்களிலேயே அவர் வெற்றியீட்டி வந்தார். தெற்கு மாநிலங்களில் அவருக்கு ஆதரவு உண்டா என்ற சந்தேகம் நிலவி வந்தது. ஆனால், அந்தச் சந்தேகத்தை நேற்று இரு தென் மாநிலங்களில் நடந்த உட்கட்சித் தேர்தல்களில் பெரு வெற்றியீட்டியதன் மூலம் தூக்கி வீசியிருக்கின்றார் ஜோன் கெரி.

வேர்ஜினியா மாநிலத்தில் அவருக்கு 52 வீத வாக்குகள் கிடைத்தன. செனட்டர் ஜோன் எட்வேட்ஸுக்கு 27 வீதமும் ஓய்வுபெற்ற ஜெனரல் வெஸ்லி கிளார்க்குக்கு 9 வீதமும் கிடைத்தன.

மற்றொரு தென்மாநிலமான டென்னெஸ்ஸியில் கெரிக்கு 41 வீதமும்,





எட்வேட்ஸுக்கு 26 வீதமும், கிளார்கக்கு 23 வீதமும் கிடைத்தன.

இந்த முடிவுகளை அடுத்து கெரியின் போட்டி வேட்பாளர்களுள் ஒருவரான லெனஸ் வெஸ்லி கிளார்க் தாம் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார்.

இதுவரை பன்னிரெண்டு மாநிலங்களில் நடந்த உட்கட்சித் தேர்தலகளில் பத்தில் கெரி வெற்றிவாகை சூடியிருக்கின்றார்.

இந்த உட்கட்சித் தேர்தல்கள் மூலம ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு அவர் குறைந்தது 2,161 பிரதிநிதித்துவ வாக்குகளைப் பெற வேண்டும்.

தற்போது போட்டியில் உள்ள ஆறு வேட்பாளர்களும் இதுவரை நடந்த உட்கட்சித் தேர்தல்களில் பெற்ற பிரதிநிதித்துவ வாக்குகளின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ஜோன் கெரி | - 510 |
| ஹவாாட் டீன் | - 182 |
| ஜோன் எட்வேர்ட்ஸ் | - 163 |
| வெஸ்லி கிளார்க் | - 98 |
| ஷாப்டன் | - 12 |
| குஷினிக் | - 02 |

இதேசமயம் -

நேற்று உட்கட்சித் தேர்தல் நடந்த வேர்ஜினியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பின் போது பதிலளித்த 90 வீதமானோர். இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி புஷ்ஷை செனட்டர் ஜோன் கெரி தோற்கடிப்பார் எனத் தாங்கள் நம்புகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.


(ஐ)

# காஸாவிற்குள் புகுந்த இஸ்ரேலியப்படை பத்துப் பலஸ்தீனர்களைக் கொன்றது!

ஜெருசலேம்,பெப்.12

காஸா பிரதேசத்தில் இஸ்ரேலியப படையினர் நேற்று மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் 10 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில பலஸ்தீனப் பொலீஸர் ஒருவரும் அடங்குவார்.

நேற்றுக் காலை காஸாவின் கிழககுப் பகுதிக்குள் டாங்கிகளுடன் இஸ்ரேலியப் படையினர் புகுந்தனர். அப்போது பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலியப் படையினர்மீது தாக்குதல் நடத்தினர். இஸ்ரேலியப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினா. இதில் தீவிரவாதிகள் 10 பேர் கொல்லப்பட்டனர்.





தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீனர் ஒருவர் மருத்துவமனைக்கு தூக்கிச்செல்லப்படுகிறார்.

- இவ்வாறு இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் தெரிவித்தார்.

இதேசமயம், பலஸ்தீனத் தரப்பினர் இந்தச் சம்பவம் குறித்துக் கூறும் போது -

டாங்கிகளின் பாதுகாப்புடன் வந்த இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப பொலீஸாரின் சோதனைச் சாவடி ஒன்றின்மீது கண்மூடித்தனமாகச் சுட்டனர் என்றும் -

இதில் பலஸ்தீனப் பொலீஸார் சிலர் காயமடைந்ததுடன், அவர்களில ஒருவர் கொல்லப்பட்டார் என்றும்-

இருதரப்பினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் சிக்கிப் பலஸ்தீனர்கள் 9 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவித்தனர்.

காஸாவில் உள்ள யூதக் குடியிருப்புக்கள் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்தும் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை தடுக்கும் நோக்கத்திலேயே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

கடந்த 6ஆம் திகதி முதல் காஸா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் இதுவரை 22 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எகிப்திய எல்லைப்புற நகரான ரஹ்வாவில் உள்ள பலஸ்தீன அகதிகள் முகாமுக்குள் நேற்றுப் புகுந்து தேடுதல் நடத்திய இஸ்ரேலிய இராணுவம், அங்கிருந்த பலஸ்தீனர்களில் சிலரைக் கைதுசெயததாகக் கூறப்படுகிறது.

(ஒ)

# தொல்லை கொடுத்த தொழிலாளியை சிங்கத்துக்கு இரையாக்கிய முதலாளி!

## தென்னாபிரிக்காவில் நடந்த கொடூரம்

ஜோகான்னஸ்பேர்க்,பெப்.12

தொல்லை கொடுத்த ஊழியரை சிங்கத்திற்கு இரையாக்கிய பண்ணை முதலாளி ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்தச் சம்பவம் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுள்ளது.

இது குறித்து கூறப்படுவதாவது:-

தென்னாபிரிக்காவின் ஜோகான்னஸ்பேர்க் நகரின் அருகே மிகப்பெரிய உயிரியல் பூங்கா உள்ளது. இந்த உயிரியல் பூங்காவைச் சுற்றி ஏராளமான விவசாயப் பண்ணைகள் உள்ளன.

இங்குள்ள ஒரு பண்ணையின் முதலாளிக்கும் அந்தப் பண்ணையில் உள்ள ஒரு தொழிலாளி நெல்சன்சிசேசன் (வயது-38) என்பவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அதிக சம்பளம் கேட்ட அந்தத் தொழிலாளி மற்ற தொழிலாளர்களையும வேலை செய்யவிடாமல் தடுத்தார் எனக் கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அந்தத் தொழிலாளியை முதலாளி மார்க்ஸ்காட் கிராங்கிலி வேலையிலிருந்து நீக்கிவிட்டார். இதன் பிறகும் அந்தத் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே தகராறு நீடித்தது.

இதைத் தொடர்ந்து தொழிலாளி நெல்சன்சிசேனை அந்த முதலாளி சில தொழிலாளிகளை அனுப்பித் தூக்கிவரச் செய்தார்.

அந்தத் தொழிலாளியின் கை, கால்களை கட்டி அருகில் உள்ள உயிரியல் பூங்காவுக்குக் கொண்டு சென்றனர். அங்கு சிங்கம் அடைத்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் அந்தத் தொழிலாளியை தூக்கிப் போட்டுவிட்டு வந்துவிட்டனர்.

பசியுடன் இருந்த சிங்கங்கள் அந்தத் தொழிலாளியை கடித்துக் குதறித் தின்றுவிட்டன.

இந்த நிலையில் தொழிலாளியைக் காணாததால், அவரது மனைவி பொலீஸில் முறைப்பாடு செய்தார். பொலீஸார் அவர் வேலைசெய்த பண்ணைக்குச் சென்று தீவிர விசாரணை நடத்திய போது அவரைச் சிங்கத்திற்கு இரையாக்கிய விடயம் தெரியவந்தது.

அந்தச் சிங்கங்களின் கூண்டு அருகே அத்தொழிலாளியின் மண்டை ஓடு மற்றும் எலும்புத் துண்டுகள் கிடந்ததையும் பொலீஸார் கண்டனர்.

இதையொட்டி பண்ணை முதலாளி மற்றும் அவரது பண்ணையில் வேலை செய்த 3 தொழிலாளர்கள் கைது செயயப்பட்டனர். 4 பேரும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு ஒருவாரம் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

## உலக அரங்கில்

# தமிழ்ப் பெண்ணை மணக்கிறார் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி

லண்டன்,பெப்.12

சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி (வயது-56) லண்டனில் வாழும் சென்னையைச் சேர்ந்த பத்ம லக்ஷமியை (வயது-33) நான்காவது மனைவியாக விரைவில் திருமணம் செய்யவுள்ளார்.

இத்தகவலை லண்டனிலிருந்து வெளியாகும் டெல்லி டெலிகிராப் நாளிதழ் தெரிவித்துள்ளது.

சல்மான் ருஷ்டியின் தீவிர ரசிகை பத்ம லக்ஷமி. சென்னையில் பிறந்த இவர், லண்டனில் வசித்துவருகிறார்.

தற்போது இவர்கள் இருவரும் நியூயோர்க்கில் மன்ஹட்டன் பகுதியில் ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒன்றாக வசிக்கின்றனர்.

நியூயோர்க்கில் திங்கட்கிழமை நடந்த ஆடை அலங்காரப் போட்டியில இருவரும் ஒன்றாக அமர்ந்திருந்தனா. இவர்களுக்கிடையே திருமணம் நிச்சயம் ஆனதற்கான அறிகுறியாக பத்ம லக்ஷமியின் மோதிர விரலில் சதுர வடிவிலான பெரிய வைரமோதிரம் காணப்பட்டது.

சல்மான் ருஷ்டி கடைசியாக கடந்த 1977ஆம் ஆண்டு எலிசபெத் வெஸ்ட் என்ற பெண்ணை மூன்றாவது திருமணம் செய்துகொண்டார். இருப்பினும் மூன்றாது மனைவியை அதிகாரபூர்வமாக இன்னும் விவாகரத்துச் செய்யவில்லை.

(ஐ)

# ராமதாஸுக்கு எதிராக ரஜனி ரசிகர்கள் பேரணி

சேலம்,பெப்.12

பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாசைக் கண்டித்து சேலத்தில் ரஜனி ரசிகர்கள் செவ்வாய்க்கிழமை கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'பாபா' படம் வெளிவந்தபோது ரஜனி ரசிகர்களுக்கும் பா.ம.கவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில், ரஜனியை விமர்சித்துப் பேசியதாக டாக்டர் ராமதாஸ் மீது புகார் கூறி, சேலம், நாமக்கல் மாவட்டத் தலைமை ரஜனி ரசிகர் மன்றம் சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. கோட்டை மைதானத்தில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட ரஜனி ரசிகர்கள், மாநகராட்சி அலுவலகம், வள்ளுவர் சிலை வழியாக வணிக வளாகம் சென்று அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டாக்டர் ராமதாஸ் மற்றும் பா.ம.கவைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பியும், கண்டன வாசகங்கள் எழுதப்பட்ட மட்டைகளை ஏந்தியும் ரஜனி ரசிகர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

(ஐ)

## குற்றச் செயல்களைத் தடுக்க ஆலோசனைச் சபை

கொழும்பு,பெப்.12

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக 13பேர் கொண்ட தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை ஜனாதிபதி அமைத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தச் சபை நியமிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான கொள்கைகளை வகுக்கும் போதும் அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் அரசாங்கத்துக்கும் பொலீஸாருக்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதே இந்தச் சபையின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

சமயத்தலைவர்கள், கல்விமான்கள பொலீஸ் அதிகாரிகள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தச சபையில் அங்கம் வகிப்பார்கள் என்றும தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய பத்து வாகனங்கள் நீதிமன்றில்

கரவெட்டி,பெப்.12

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் பருத்தித்துறை நீதிமன்றினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி, வல்லிபுரக்கோயில் பகுதியில் இரவுவேளைகளில் மணல் ஏற்றிவந்த வாகனங்கள் நெல்லியடிப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டனர்.

இதனையடுத்து ஆலயங்கள் மற்றும் பொதுநிறுவனங்களுக்கு மணலை ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அந்த வாகனங்களை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு பொலீஸாருக்குப் பணித்துள்ளார்.

இரவுவேளைகளில் தினமும் இவ்வாறு மணல் திருடப்பட்டு வருவதாகவும் -

மணல் திருட்டில் ஈடுபடுவோர் கையடக்கத் தொலைபேசிகள் சகிதம் இதில் ஈடுபடுவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10-70)

## இணுவில் மத்திய கல்லூரியின் மைதான வீதியில் துர்நாற்றம்

வலி.தெற்கு,பெப்.12

இணுவில் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும் வீதி குப்பை கூழங்கள் கொட்டப்படுவதால் அசுத்தமடைந்து வருவதாகப் பாடசாலைச் சமூகத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

தகரப்பேணிகள், பீங்கான் ஓடுகள், வெட்டப்பட்ட தலைமுடிகள் போன்ற பல்வேறு வகையான கழிவுப்பொருள்கள் இவ்வீதியோரமாகக் கொண்டுவந்து போடப்படுகின்றன.

மாணவர்கள் விளையாட்டு மைதானத்துக்குச் செல்லும்போது இவற்றால் பாதிப்படைகின்றனர் என்றும்-

சகிக்க முடியாத துர்நாற்றம் அப்பகுதியில் வீசுவதால் சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வலிகாமம் தெற்குப் பிரதேச சபையினர் உரிய கவனமெடுத்து இக்குறைபாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஒ-152)

## சுன்னாகம் - கந்தரோடை வீதியில் இராணுவக் காவலரண்கள் நீக்கம்

வலி.தெற்கு,பெப்.12

சுன்னாகம் - கந்தரோடை வீதியில் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண்களை இராணுவத்தினர் அப்புறப்படுத்தியுள்ளனர்.

ஆலயத்தின் எதிர்ப்புறத்தில் அமைந்துள்ள மூன்று கடைக் கட்டடங்களில் இராணுவத்தினர் தமது காவலரண்களைக் கடந்த பல ஆண்டுகளாக அமைத்திருந்தனர்.

மேற்படிப் பகுதியில் அந்தோனியார் ஆலயத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த காப்பரண்கள் பல ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

கடந்த வார இறுதியில் எஞ்சி இருந்த காப்பரண்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ-152)

## மீனவர் சங்க சமாசம் பச்சிலைப்பள்ளியில் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.12

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புலோப்பளை, அல்லிப்பளை, கிளாலி சங்கத்தார் வயல் ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்தே இந்த சமாசம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண நிகழ்வில் பளைப பிரதேச செயலர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சமாசத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (ஒ-117)

## தென்மராட்சிப் பாடசாலைகளுக்கு வகுப்பறைகள் அமைப்பு

தென்மராட்சி,பெப்.12

ஜப்பானிய பாஜ் நிறுவனத்தினர் தர்மக்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம் ஆகியவற்றில் வகுப்பறைத் தொகுதிகளை அமைத்துள்ளனர்.

வகுப்பறைத் தொகுதிகள் அமைக்கப்பட்டதால் பாடசாலைகளில் நிலவிய வகுப்பறைப் பற்றாக்குறை ஓரளவு பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பளை அபிவிருத்திப் புனர்வாழ்வுப் பிரிவினர் இந்த வகுப்பறைத் தொகுதிகளை அமைத்துக் கொடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

## மனைவி, மகனை வெட்டியவர் தன்னையும் காயப்படுத்தினார்!

### கோப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.12

மகனையும் மனைவியையும் வெட்டியவர் தன்னையும் வெட்டிப் படுகாயப்படுத்திக் கொண்டார். இச் சம்பவம் கோப்பாயில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கணவன் மனைவியை வெட்டினார் என்றும் -

அப்போது குறுக்கே வந்த மகனும வெட்டுக்காயத்திற்குள்ளானார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் கல்வியியற் கல்லூரி வீதியில் வசித்துவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இ.றஞ்சன் (வயது 40), அவரது மனைவி றஞ்சன் மேகலாதேவி (வயது 32), மகன் றஞ்சன் டிலக்ஷன் (வயது 7) ஆகிய மூவருமே வெட்டுக்காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மகனுக்கும் மனைவிக்கும் வெட்டியபின் பொலீஸார் இவரைத் தேடியபோதே அவர் தனக்குத் தானே வெட்டிக் காயப்படுத்திக்கொண்டார் என்று கூறப்படுகிறது. (ஒ-6)


### நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை
### படவரைஞர்களைப் பதிவுசெய்தல் – 2004

**தேவையான தகைமைகளும் நிபந்தனைகளும்**

1. அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர் பயிற்சிநெறி அல்லது தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (குடியியல்) அல்லது தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (கணிய அளவையியல்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிபந்தனைகளுக்கமைய படம் வரையப்படவேண்டும்.
3. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் தொழில்நுட்பச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளையும் இணைத்து விண்ணப்பித்தல் வேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்படும் படவரைஞர்கள் பதிவுக்கட்டணமாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.
5. பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் 2004. 02. 25ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
12.02.2004 (சி-33234)(24-21-13-17)

திரு.ஏ.எம்.ஜோசெப்,
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

### கார் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள FB 14 NISSAN SUNNY SUPER SALOON 301 - xxxx FULL OPTION வெள்ளை நிறக் கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
(28376) 077 6052219 (24-13-21-17)

### மில்வேலைக்கு ஆள்கள் தேவை

அரைக்கும் ஆலை ஒன்றிற்கு நெல்குற்ற, மா அரைக்க, மிளகாய அரைக்க ஆள்கள் உடன் தேவை.

உடனே நேரில் வரவும்

*சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.*

தொடர்பு:
பாலா மில்,
உரும்பிராய்.
(28369)(39-21-13-17)

### யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்க
பொதுக்கூட்டமும்
புதிய உறுப்பினர் தெரிவும் - 2004

இடம்: பாடசாலை மண்டபம்
திகதி: 14-02-2004 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

யா/மண்டைதீவு ம.வி. (28383) (21-17-18) - அதிபர்.


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பொன்னுத்துரை
**(ஊரெழு பொன்னுத்துரை)**
(Line Man, Telecom)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், முத்தட்டிமட லேன், கோண்டாவில மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை 10.02.2004 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அருளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் சிவபாக்கியம் (லண்டன்), காலஞ்சென்ற கந்தசாமி சிவசுப்பிரமணியம் (துரை, வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, கனகராசா, சேனாதிராசா, பூபாலசிங்கம், கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் புஷ்பராணி (நீர்கொழும்பு), பரமேஸ்வரன், செல்வராணி (கனடா), யோகராணி, கோபாலகிருஸ்ணன் (சுவிஸ்), இந்திராணி (கனடா), விஷயராணி (கனடா), புஷ்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் இராஜேஸ்வரி, ஜோர்ஜ் (கனடா), சண்முகலிங்கம், ரஞ்சிதமலர் (சுவிஸ்), யோகரத்தினம் (கனடா), தாசன் (கனடா), அன்னலஷ்மி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரஜிந்தன் (சுவிஸ்), பிருந்தா (சுவிஸ்), காலஞ்சென்ற மகிந்தன் மற்றும் சிவேந்திரா (கனடா), தர்சினி, சுரேஷ்குமார், நிமல்ராஜன் (கனடா), மயூரன் (ஜேர்மனி), சசிகரன் (கனடா), சுபாஷினி (கனடா), சதீஸ்கரன் (பிரான்ஸ்), தர்ஷினி (பிரான்ஸ்), சகிதா (கனடா), மகேஸ்வரன் (கனடா), சாமிலா (கனடா), நிரஞ்சன் (கனடா), குமுதினி (நோர்வே), சிறிநந்தகுமார் (நோர்வே), சுதாகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), கோமளா (சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), கவிதா (சுவிஸ்), ரவீந்திரா (டென்மார்க்), சுபாசினி (டென்மார்க்), கோமதி (சுவிஸ்), நந்தினி (சுவிஸ்), டனிகா (கனடா), நவீனா (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி), பிரவீன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் வீணா (சுவிஸ்), சங்கீதா, சதுர்ஜனன், மதுஷா(கனடா), ஜெனீபா (பிரான்ஸ்), தனுசன் (கனடா), தனிக்கா (கனடா), ஈசன் (கனடா), சௌமியா (நோர்வே), சஜீத் (நோர்வே), ஆகாஷ் (சுவிஸ்), அக்சனா (சுவிஸ்), சபீனா (டென்மார்க்), கபினாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2004 சனிக்கிழமை காலை 10.30மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு*
T.P 4590121, 0777 101461,
0777 491349.

தகவல்:
பரமேஸ்வரன் (மகன்).

(28366)(35-21-13-17)




### மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று (12.02.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு

**டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின்**
**அதிகாரம் பெற்ற சேவை முகவர்**

### சந்நிதி முருகன் வேர்க் சொப் & சேவிஸ்

நிறுவனத்தினரின்
பஜாஜ் மோட்டார் சைக்கிள்களுக்கான
உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம்

திறந்து வைக்கப்படுகின்றது. ஆகவே, அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன், எமது ஓராண்டுப் பூர்த்தி தினத்தை முன்னிட்டு இன்று மட்டும் பஜாஜ் மோட்டார் சைக்கிள்களுக்கு இலவச சேவிஸ் வழங்கலும் சிறுதிருத்த வேலைகளும் செய்துகொடுக்கப்படும் என்பதையும் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

DPMC bajaj

241, பருத்தித்துறை வீதி,
வீரகாளி அம்மன் கோவிலடி.
யாழ்ப்பாணம்.

T.P.:777-110199.

- சந்நிதி முருகன் வேர்க் சொப் & சேவிஸ் நிலையம்.
(28384)(34-14-12-32)

நூலகம் யாழ்ப்பாணம்

உதயன்

## கூட்டுக்குள் குழப்பம்!

தேர்தலை இலக்கு வைத்து - ஆட்சி அதிகாரத்தின் மீது பேராசை கொண்டு - அவசர அவசரமாக அமைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்குள் ஆரம்பத்திலேயே சலசலப்பு - புகைச்சல் - தொடங்கிவிட்டது.

'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி' யின் ஐக்கியம் ஆரம்பத்திலேயே கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றது.

ஒவ்வொரு கட்சிக்கும் தேர்தலில் 'ஆசனம்' ஒதுக்குவதில்தான் சிக்கல்; இழுபறி; குழப்பம் எல்லாமே.

இந்தக் கூட்டு உருவாவது ஆரம்பம் முதல் இழுபட்டமை கூட, இந்த இடஒதுக்கீட்டுப் பிரச்சினையால் தான்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் உறவைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றுவதும், வாய்ப்பு ஏற்பட்டு அரசு அமைக்கும் சந்தர்ப்பம் கிட்டினால் அதில் அதிகாரப் பங்கைப் பெற்றுத் தம்மை வளர்த்துக் கொள்வதும் ஜே.வி.பியினரின் திட்டம்.

ஜே.வி.பி. உறவைப் பயன்படுத்தி எப்படியும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எண்ணம்.

இதனை நிறைவேற்றுவதற்காக ஜே.வி.பிக்கு தமது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழாமில கணிசமான இடமளித்தாவது அவர்களைக் கைக்குள் போட முன்வந்தது சுதந்திரக்கட்சி.

அதன் அடிப்படையில் கூட்டு உருவாவதற்கான ஒப்பந்தத்துக்கு முன்னரே ஜே.வி.பிக்குக் கணிசமான இடமளிக்க இணக்கம் தெரிவித்துவிட்டது சு.க.

இப்போது அந்தளவுக்கு இடத்தை அளிப்பதில்தான இழுபறி. ஜே.வி.பிக்கு அதிக இடங்களை வழங்குவதற்காகத் தனது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரை ஓரங்கட்டவேண்டிய நிலைமை சு.க. தலைமைப் பீடத்துக்கு.

இந்த நெருக்கடி நிலைகளைத் தாண்டி சுதந்திர மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்தாலும், அதில் உள்ள ஜே.வி.பி. உறுப்பினா களை விட அதிக விருப்பு வாக்குகளைப் பெறமுடியுமா என்ற சந்தேகம் பல சு.க.பிரமுகர்களுக்கு!

அப்படிப் பெற்று வந்தாலும் கூட, இரு கட்சித் தலைமைகளுக்குமிடையில் ஏற்கனவே காணப்பட்டுள்ள இணக்கத்தின்படி, ஜே.வி.பியினருக்குக் கூடுதல் நாடாளுமன்ற ஆசனங்களை அளிப்பதற்காகத் தேர்தலின பின்னர் தங்களை ஒதுங்கி, வழிவிட்டு இடம்கொடுக்கும்படி கட்சித் தலைமை வற்புறுத்துமோ என்ற அச்சமும் அவர்களுக்கு உள்ளது.

இதனால் அவர்களில் பலர் தத்தமது பிரதேசங்களில் தங்களுக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, தங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால் என்ன என்ற சிந்தனையில் இருக்கின்றார்கள் எனத் தெரிகிறது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்களைக் கொண்டிருந்த ஜே.வி.பிக்கு புதிய கூட்டில் குறைந்தது 32 ஆசனங்களையாவது கொடுக்க சு.க. தலைமை இணங்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் தங்களின் இருகட்சிகளுக்கும் கூட்டாக இருந்த ஆசனங்களை விட மேலும் பதினைந்து முதல் இருபது ஆசனங்களை தற்போதைய ஜே.வி.பி. கூட்டின் மூலம் பெறலாம் என சு.க.தலைமை கனவுகாண்கின்றது. எனவே, அந்த இடங்களை ஜே.வி.பிக்கு வழங்குவதன் மூலமாவது ஆட்சியைப் பிடிக்கலாம் என்றும் அது மனப்பால் குடிக்கிறது.

எனவே, தற்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் இருந்த எண்ணிக்கை அளவு உறுப்பினர்கள் தமது கட்சியிலிருந்து இம்முறையும் தவறாமல் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் -

ஆகவே, ஜே.வி.பிக்கு அதிக இடங்களை அளிப்பதால் தமது கட்சிக்குள் யாருடைய இடமும் வெட்டப்படமாட்டாது என்றும் -

சு.க.தலைமை சமாதானம் கூறுகின்றது. அது செல்லுபடியாகுமா என்பதுதான் கேள்வி!

கடந்த தேர்தலில் கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கூட்டிக் கழித்துப் பெருக்கி அதனடிப்படையில் வகுக்கப்பட்டது. இந்தப் புதிய கூட்டு.

கடந்த தடவை சுதந்திரக் கட்சி பொ.ஐ.முன்னணியல் போட்டியிட்டது. அப்போது பொ.ஐ.மு. - ஜே.வி.பி. ஆகிய இரண்டும் தனித்தனியாகப் பெற்ற வாக்குகளைக கூட்டினால் அது 9 மாவட்டங்களில் ஐ.தே.கட்சி பெற்ற வாக்குகளை விட அதிகமாகும். அந்த 9 மாவட்டங்களையும் வெல்வதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம் என்பதுதான் இந்தக் கூட்டின் கணக்கு.

இந்தப் பேரினவாதக் கூட்டுக்கு மக்கள் தரப் போகும் பதில் - அது போட்டிருக்கும் கணக்கு சரியாகுமா பிழையாகுமா என்பது - இன்னும் ஏழு வாரங்களில் தெரிந்து விடும்.

# தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினர் அரச அலுவலருடன் இணைந்து சோதனை

கரவெட்டி,பெப்.12

நெல்லியடி நவீன சந்தையில் சுகாதாரத் திணைக்களத்தினருடன் இணைந்து தமிழீழ சுகாதார சேவையினர் சோதனை மேற்கொண்டனர்.

இந்த நவீன சந்தையில் அண்மைக்காலமாகச் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் எழுந்தன. இதனையடுத்தே இந்தச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நவீனசந்தையினுள் இயங்கும் இறைச்சி, மீன் விற்பனைப் பகுதியில் இறைச்சி மற்றும் மீன்கழிவுகள் தேங்கித் துர்நாற்றம் வீசுவது இந்தச்சோதனை நடவடிக்கையில் அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து, அந்தக்கழிவுகளை அகற்ற நடவடிக்கை மேற கொள்ளப்பட்டது. அத்துடன் இறைச்சி, மீன் விற்பனையாளர்களுக்கு அந்தஇடத்தில் சுகாதாரம்பேணும்படி அறிவுறுத்தப்பட்டது. அங்கு இயங்கும் உணவகமும் சோதனையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்படி குழுவினர் துன்னாலையில் உள்ள கொல்களத்திற்கும் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். கொல்களத்தில வெட்டப்படும் பிராணிகளின் கழிவுகள், நாய்கள், காகங்கள் போன்ற வற்றால் அந்தப் பகுதியெங்கும் விசிறப்பட்டிருந்ததையும் -

இதன் காரணமாக அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டிருப்பதையும் - சுகாதாரக் குழுவினர் கண்டனர். இந்த விடயம் பிரதேசசபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து நெல்லியடி நவீனசந்தை மற்றும் துன்னாலை கொல்களம் ஆகியவற்றில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-70)

# நிரந்தர சத்திரசிகிச்சை நிபுணர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அவசியம்!

### நிர்வாக வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை நிபுணாகள் நிரந்தரமாக நியமிக்கப்படுவது அவசியமாகும்.

- இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாக வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கடந்த பல வருடங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் நரம்பியல், இருதயநோய் மற்றும் புற்றுநோய், தோல் வைத்தியம் ஆகிய துறைகளுக்கான சத்திரசிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. இதனால், நோயாளர்கள் மட்டுமன்றி வைத்தியசாலை நிர்வாகமும் பல இடர்பாடுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது.

சத்திர சிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சைப் பலமுறை கேட்டிருந்தது. ஆயினும், இந்தக் கோரிக்கை பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

1986ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்படி துறைகளில் வைத்திய நிபுணர்கள் நிரந்தரமாகக் கடமையாற்றி வந்தனர். குடாநாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழலையடுத்து வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கென சத்திரசிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை.

குறிப்பாக குடாநாட்டில் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கு வைத்திய நிபுணர் எவரும் இல்லை. இதனால், நோயாளிகள தென்னிலங்கை செல்ல வேண்டியநிலையே நீண்டகாலமாக நிலவுகிறது. (ஒ-7)




வல்லைப் பாலத்திற்கு அருகில் உள்ள அரச காணியில் இந்தப் பெயர்ப்பலகை காணப்படுகிறது.

தனியார் ஒருவரே இங்கு கல்லுடைக்கும் ஆலையை அமைப்பதற்கான முன்முயற்சியில் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பெயர்ப்பலகையைப் பார்வையிடும் மக்கள் இந்துகலாசார அமைச்சுக்கும் கல்உடைக்கும் ஆலைக்கும் என்ன சம்பந்தம் என்று கேள்வி எழுப்புகின்றனர். (ஒ-10)

# உரவிலையைக் குறைக்கக் கோரி உடுவில் சம்மேளனம் தீர்மானம்

வலி.தெற்கு,பெப்.12

உரங்களின் விலைகளைக் குறைக்குமாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை உடுவில் கமநலசேவை நிலைய விவசாய சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

உடுவில் கமநலசேவை நிலையக் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற விவசாயிகள் சம்மேளனக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உடுவில் பிரதேச விவசாயிகளின் பயிர்செய்கைக்கு முக்கியமான உரத்தின் விலை அதிகரித்துள்ளது. இதனால், விவசாயத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளமுடியாதுள்ளது. ஆகவே, உடனடியாக உரத்துக்கான விலையைக்குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு உரங்களின் விலைகளைக் குறைக்கத் தவறும் பட்சத்தில போராட்டம் நடத்த வேண்டியநிலை ஏற்படும் எனவும் மேற்படி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உடுவில் கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன், கமத்தொழில் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆனந்தராசா பொருண்மிய பிரதிநிதி ஆகியோரும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ஒ-152)

# கணக்குகள் குறித்து விளக்கமளிக்க உள்ளூராட்சிச் சபைகள் பின்னடிப்பு

### கணக்காய்வாளர் அலுவலகம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகள் பலவும் கடந்த கால கணக்கு அறிக்கைகளுக்கான சரியான விளக்கங்களை சமர்ப்பிக்கத் தவறிவிட்டமை தொடர்பாக மாகாணப்பிரதிப் பிரதம கணக்காய்வாளர் அலுவலக அதிகாரி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள் கடந்தகாலக் கணக்குகள் தொடர்பாகக் கோரப்பட்ட ஐயவினாக்களுக்கு உடன பதிலளிக்கவில்லை என்றும் -

இதனால், கணக்காய்வுப் பணிகளைப் பூர்த்திசெய்யமுடியாது உள்ளதாகவும் மாகாணக் கணக்காய்வு அலுவலக வட்டாரங்கள தெரிவித்தன.

கணக்காய்வு தொடர்பான ஐயவினாக்களுக்கு உரிய பதில்களை உடனுக்குடன்பெற சம்பந்தப்பட்ட சபைகளுக்கு கணக்காய்வு அதிகாரிகளை அனுப்பி நடவடிக்கை எடுக்க மாகாண கணக்காய்வு அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தற்போது 1995 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையிலான கணக்கு விவரங்கள் ஆராயப்பட்டு திருத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-185)

### நாளை

மாசி 1
வெள்ளிக்கிழமை
(13.02.2004)
திதி:அட்டமி
பின்னிரவு 5.14வரை.
நட்சத்திரம்:விசாகம்
இரவு 11.36 வரை
சுபநேரம்:6.34-8.04
ராகுகாலம்:11.04-12.34
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இளவயதில் சேமியுங்கள். முதுமையில் செலவிடுவதற்காக.

# சமுர்த்தி வங்கிக் கணக்குகளுக்கான குழுப் புத்தகத்துக்குப் பற்றாக்குறை!

கொடிகாமம்,பெப்.12

கடந்த வருடத்தின் இறுதி 6 மாதக் காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் 12 ஆயிரத்து 700 சிறுகுழுக்கள் சமுர்த்தி வங்கியில கணக்குகளை ஆரம்பித்துள்ளன. ஆயினும், அவற்றுக்கான குழுப் புத்தகமும் பங்கு அங்கத்தவர் வைப்புப்புத்தகங்களும் முழுமையாக வழங்கப்படவில்லை. இந்தநிலைக்கு அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று கருதவேண்டியுள்ளது.

- இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் ரகுநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலில் அவர் கலந்துகொண்டார். அப்போது வங்கிப் புத்தகங்கள் பற்றாக்குறை சம்பந்தமாக சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த சமுர்த்தி முகாமையாளர், வங்கிப் புத்தகங்கள் பற்றாக்குறையைச் சீர்செய்யத் தாம் சமுர்த்தி முகாமையாளர் சங்கம் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் -

அது சரிவர நிறைவேறாத பட்சத்தில் நேரடியாகவே உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பேச உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் 60 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. அவற்றிக்குக் குறைந்தது 60 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர். ஆயினும், வங்கி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 43 சமுர்த்தி உத்தியோகத்தர்களே கடமையில் உள்ளனர். இதேபோன்று 4 சமுர்த்தி வலயங்களுக்கும் மகாசங்கத்திற்கும் பிரதேச செயலகத்திற்கும் என் குறைந்தது 6 முகாமையாளர்கள் தேவை. ஆனாலும் தற்போது 4 முகாமையாளர்களே கடமையாற்றுகின்றனர்.

இதேசமயம், 10 சமுர்த்தி உத்தியோகத்தர்களே தற்போது மேலும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-74)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

WPHF தொடரிலக்கமுடைய Canter Guts பெற்றோல் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திரு. நல்லசமாரியன், கோண்டாவில் சந்தி, T.P. 0777 242511, 021 222 2488. (28338)

நல்ல நிலையிலுள்ள 21" Black Sony, G 21Q2S கலர் T.V. விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.குமாரசாமி, பெரியரசடி, சாவகச்சேரி. (28358)

### ஆங்கிலக் கல்வி

தரம் 4 தொடக்கம் தரம் 10 வரை பயிலும் மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து தெளிவான முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு: இல.245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28324)

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தர்மலிங்கம் என்பவருடைய தே.அ.அ.(இல.490312021V), வன்னிப்பாஸ் (023238), வீட்டுத்திறப்பு - 2 கோர்வை ஆகியவை புத்தூர் சந்திக்கும், யாழ்ப்பாணத்துக்குமிடையில பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மீசாலை, புத்தூர்சந்தி, கண்டி வீதியிலுள்ள கஜமுகன் விற்பனை நிலையத்தில் ஒப்படைத்துதவவும் (28368)

இராசையா பாலசுப்பிரமணியம் என்பவரது தே. அ. அ. (671115201V), வி.அ.அ.(2070312104) என்பன 06.02.2004 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 239, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (28365)

### மணமகள் தேவை

சைவசமயம், 36 வயது, ரேவதி முதலாம் பாதம் நட்சத்திரம் யாழ்ப்பாணம் பிரபல கல்லூரி ஒன்றில் ஆசிரியர் மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதகத்துடனும் புகைப்படத்துடனும் தொடர்புகொள்ளவும்: எம்.பி.ஸ்ரனிஸலஸ் (மேக்ஸ்), 1/1, நக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (27134)


COMPUTER TYPING

தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலம், MS Office, Page Maker, Corel Draw, Photo Shop.

STCA கல்வியகம்

(1977 இல் நிறுவப்பட்டது)

149 (37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்)

கிளை நிறுவனங்கள் இல்லை.

(28361)


# வலி.தென் மேற்குப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

யாழ்ப்பாணம்,பெப்.12

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையினால் சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கப்படவுள்ளது.

இதுவரை நன்கொடை பெறுவதற்கான பரிசோதனைப் படிவம் பெறாதவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக பிரதேச சபைத் திட்டமிடற்பிரிவு உள்ளூராட்சி உதவியாளரிடம் படிவத்தைப் பெறுமாறும்-

இதனைப்பூரணப்படுத்தி எதிர்வரும் மார்ச்மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் அதே இடத்தில் ஒப்படைக்குமாறும் - உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார்.

இவ்வருடம் ஒவ்வொரு சனசமூக நிலையமும் பிரத்தியேகமாக ஆராயப்பட்டு நன்கொடைபெறுவதற்கு தெரிவு செய்யப்படும்.

சிறந்த சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 600 ரூபாவும்-

ஏனைய சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

குறித்த திகதிக்குள் படிவத்தைப பெறாத சனசமூக நிலையங்களின் பதிவு இரத்துச் செய்யப்படும் எனவும அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-185)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தரப்புலமைப்பரிசில் பரீட்சை 2003 இல் 171 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து யாழ்.மாவட்டத்தில் இரண்டாவது இடத்தைப்பெற்ற

செல்வன்

**பே.ஜதுர்ஸ்சனன்**

அவர்களைப் பாராட்டுவதோடு இன்று (12.02.2004) வியாழக்கிழமை தனது 10ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழும் இந்த வேளையில் இவருக்குக் கல்விபுகட்டி நெறிப்படுத்திய யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள். ஞானக்குழந்தை கல்விக்கழக இயக்குநர், ஆசிரியர்கள், வே. அன்பழகன் ஆசிரியர் ஆகியோரையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், தங்கைமார், தம்பிமார்.

இல. 92, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(28347)(35-34-19)


## இதோ! மூன்று படம் இலவசம்!!

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் சகலவிதமான புகைப்படச்சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும் உங்கள் புகைப்படச்சுருள்களைப் பெற்றுக்கொள்ள

| ஸ்கை எலக்ரோனிக்ஸ் | தேவன் சண் |
|---|---|
| 10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | 119, கண்டி வீதி, சாவகச்சேரி. |

மூர்த்தி ஸ்ருடியோ அன் கலர் லாப்

பிரதான வீதி, மானிப்பாய்.

T.P:-021-222-2884

(28263)(34-19)


## சாயி சிந்தனை

### புனிதம் பேணுவோம்



நீங்கள் எத்தனையோ ஆன்மீகப் புத்தகங்களைப் படித்திருக்கலாம். எத்தனையோ புனித அருளுரைகளைக் கேட்டிருக்கலாம். புனிதமானவர்களின் தரிசனத்தையும் நீங்கள் பெற்றிருக்கலாம். இவையனைத்தும் இருந்தும் என்ன பயன்? புனிதமற்ற உணவும், தூய்மையற்றவர் உறவும் இருந்தால் உங்களது அனைத்து நற்குணங்களும் அடங்கிப்போய்விடும். தீயஎண்ணங்கள் போனால்தான், நல்ல எண்ணங்கள் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளும். ஆகவே, ஒவ்வொருவரும் தீயஎண்ணங்களை விலக்கிவைக்க முயற்சிக்க வேண்டும்.

இந்த உதாரணத்தைப் பாருங்கள். ஒரு வீடு கட்டுகிறீர்கள். வாயிற்படி வைத்து, ஜன்னல்கள் அமைத்து காற்றோட்டமாக அமைக்கிறீர்கள். வாயிற்கதவு இருக்கிறதென்பதற்காக நாய், பன்றி இவற்றையெல்லாம் உள்ளே வர அனுமதிக்கமாட்டீர்கள் அல்லவா? உங்களது குடும்பம், நண்பர்கள், உறவினர்கள் இவர்களுக்காகத்தானே வாயிற்கதவு திறந்திருக்கும்? அதே போலத்தான் உடலுக்கு மனம் என்பது முதல்நிலை வாயிற்கதவு. புலன்கள் எல்லாம் ஜன்னல்கள். தேகம் என்பது தெய்வம் உறையும் வீடு.

"தேஹோ தேவாலய ப்ரோக்தோ ஜீவோ தேவஹ் ஸனாதனஹ" தேகம என்பது தேவாலயம். அதன் உள்ளே உறைபவர்.

நிரந்தரமான தெய்வ தத்துவமான இறைவன். இப்படிப்பட்ட புனிதமான வீட்டினுள் யாரை அனுமதிக்கவேண்டும் என நீங்கள் உங்களுக்குள் விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும். யாரை அனுமதிக்கலாம், யாரை அனுமதிக்கக்கூடாது என்பதற்கான விசாரணை அவசியம். ஆனால், இன்று எவரும் அத்தகைய விசாரணை செய்வதாகத் தெரியவில்லை. அதன் விளைவாக எல்லாவிதமான தீய எண்ணங்களும், தீயசிந்தனைகளும் மனதினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

"ந ஸ்ரேயோ நியமம் வினா" ஒவ்வொன்றிற்கும் ஒழுக்கம் என்பது அவசியம். யாரெல்லாம் வழியில் தென்படுகிறார்களோ அவர்களிடம் எல்லாம் நீங்கள் நட்பை வளர்த்துக்கொள்ளலாகாது. முதலில் அவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்று பார்க்கவேண்டும். அதற்காக யாரையும் வெறுக்கவும் கூடாது. அதேசமயம், மற்றவரோடு பழகுவதில் நீங்கள் அளவுமீறவும் கூடாது. அளவுக்குட்பட்டு பழக்கமும் தொடர்பும் ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அன்பு, அறிவு, அடக்கம் அனைத்தும் நிறைந்த

**இராஜரத்தினம் சிவபுண்ணியம்**

(முன்னாள் உதவிப்பிரதேச செயலர், கரவெட்டி)

அவர்கள் 23.01.2004 அன்று பருத்தித் J i w kht l l e ஜ ஜ j திரு.க.அரியநாயகம் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டுள்ளமை குறித்து எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.திருமதி பாலச்சந்திரன்.

தும்பளை, பருத்தித்துறை.

(28346)(39-19-34)

## வாழ்த்துகின்றோம்



எனது சனசமூக நிலைய வளர்ச்சியில் பெரும் அக்கறையுடன் செயற்பட்டுவரும் தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான குரு

சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி

**சு.ஸ்ரீரங்கநாதன் ஐயா** அவர்கள்

இன்று (12.02.2004) வியாழக்கிழமை ஆசாரியாபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்)பெறுவதையிட்டு மனதாரவாழ்த்துகின்றோம். அவரது ஆன்மீகத் தொண்டு மென்மேலும் சிறக்க எல்லாம்வல்ல அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்.

சுழிபுரம். (28359)(35-19)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



தொல்புரம் – வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான தொண்டர்சபையின் ஆரம்ப காலம் தொடக்கம் அதன் வளர்ச்சிக்கு உதவிவரும் தேவஸ்தானகுரு

சிவஸ்ரீ. சு.சுந்தரராஜக்குருக்கள் அவர்களின் புதல்வன்

சிரஞ்சீவி **சு.ஸ்ரீரங்கநாதன் ஐயா**

அவர்கள் இன்று (12.02.2004) வியாழக்கிழமை ஆச்சார்யாபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) பெறுவதையிட்டு மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம். அவரது சமயத்தொண்டு சிறக்க அம்பாள் ஆச்சியின் திருவருளைவேண்டி நிற்கின்றோம்.

தொல்புரம - வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான தொண்டர் சபை.

(28360)(34-19)


Direct Start

பெப்ரவரி மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Registered with Ministry of Tertiary & Vocational Education

COMPUTER TRAINING COURSES

Diploma in MS Office (DMO)

Diploma in Desktop Publishing (DTP)

Diploma in Computer Studies (DCS)

Diploma in Web Design (DWD)

Diploma in Computer Programming (DCP)




- இலவச பாடநூல்கள்
- தவணைமுறை கட்டணங்கள்
- 100% செயல்முறை பயிற்சி
- ICM, UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- அனைத்து பாடநெறிகளுக்கும் காலம் 3 1/2 மாதங்கள்

மேலதிக விபரங்களுக்கு

ASIAN COMPUTER SYSTEMS

| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ©021-222 5677 | PRASHANNAA COMPUTER STUDY CENTRE 108, K.K.S. வீதி, சுன்னாகம். © 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) © 0777-878160 |
|---|---|---|

Canadian Institute of Information Technology

St.Patrick's College, Jaffna

புதிய கணனி வகுப்புகள்

16.02.2004

Level I → Grade 01 - 05
Level II → Grade 06 - 09
Level III → Grade 10 - 13

* O/L எடுத்த மாணவர்களுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* குறிப்பாக அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

நிர்வாகி C.I.I.T.

T.P.: 222 - 6316. (C/33225)(34-21-19-11)

# ரணிலின் சர்வதேச வலைப்பின்னல் சிங்களவரின் பாதுகாப்புக் கருதியதே!

யாழ்ப்பாணத்து மக்களுடன் அவர்களின் சமூக, சமயப் பிரதிநிதிகள் மற்றும் அபிவிருத்தி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை 'நாடி பிடித்துப் பார்க்க கொழும்பிலிருந்து உயர்மட்டக்குழு ஒன்று கடந்த வாரம் இங்குவந்தது. இலங்கை நீதி அரசமைப்பு விவகாரங்கள், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைசசின் தனிச்செயலாளர் சிரால் லக்திலக்க தலைமையில் வருகைதந்த இக்குழுவில் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகரும் கொழும்பு சட்டக்கல்லூரி விரிவுரையாளரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளருமான காலிங்க இந்தாதிஸ்ஸ உளளிட்ட நீதியமைச்சின் உயர்நிலை உத்தியோகத்தர்கள் சிலரும் அங்கம் பெற்றனர்.

'சமகால அரசியல் நெருக்கடியும் சமாதானத்தின் போக்கும்' என்ற விடயத்தின்கீழ் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழ்மக்களின் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் தலைவரும் சமூக, பொது நிர்வாகம் சார்ந்த உயர்மட்டப் பதவிகளை வகித்தவருமான சி.வி.கே.சிவஞானம் தலைமைவகித்தார். மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் முன்னணிச் செயற்பாட்டாளரும் பணிப்பாளருமான திருமதி சரோஜா சிவச்சந்திரன், கண்டி மனிதவள அபிவிருத்தி நிலையத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரி சிவப்பிரகாசம், மேலும் பல அமைப்புக்களின் பெண்பிரதிநிதிகள், சில கிராமசேவகர்கள், பத்திரிகையாளர்கள், பல அரசசார்பற்ற, சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் அதில் பங்குபற்றினர்.

அங்கு தலைமையுரை நிகழ்த்திய சி.வி.கே.சிவஞானம், சமூக, பொருளாதார அரசியல் பரிமாணங்களுடன தமிழர் எதிர்பார்ப்பைத் தெளிவுபட விளக்கினார்.

அவரையடுத்து அங்கு உரை நிகழ்த்திய நீதி அரசமைப்பு விவகார இனநல்லிணக்க அமைச்சின் தனிச் செயலர் சிரால் லக் திலக்க, தான் தனது தனிப்பட்ட அபிப்பிராயமாக விடயங்களை அணுகி விளக்குவதாகக் கூறி ஆரம்பித்தார்.

ரணில் தலைமையிலான அரசு இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு மூன்று யுக்திகளின் அடிப்படையில் செயற்படுவதாக (செயற்பட்டதாக) கூறினார். போரை நிறுத்த விடுதலைப் புலிகளின் தலைமையுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை (Mou), சர்வதேச இலகுபடுத்தல், வசதியாக்கம். (Internationally facilitated) என்பவற்றோடு கூடிய சமரசப் பேச்சு. சர்வதேச ஆதரவுடன் (Internationally supported) அபிவிருத்தி என்பவையே ரணில் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் மூன்று யுக்திகள் எனக் கூறி அவற்றின் போக்குகளை விளக்கினார். இதுபற்றிப் பின்னர் கலந்துரையாடலில் பங்குபற்றியவர்கள் மத்தியிலிருந்து கனமான வினாக்கள் தொடுககப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, பிராந்திய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வல்லரசுகளாக விளங்கும் நாடுகளின் ஒத்துழைப்பு, பங்காற்றுகையுடன் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் ஏற்படுத்திக்கொள்ளுதல், மேலும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் என்பனபற்றிய செயற்றிட்டங்களில் இறங்கியிருந்தார். அதை அவரே தனது யுக்தியாக விவரித்தும் இருந்தார் என்பது சுட்டிக்காட்டப்பட்டு இவ் விடயங்கள் சமரசச் சமனிலைக்கு உதவுமா எனக் கேட்கப்பட்டபோது விடையளிக்க சற்று யோசித்த லக்திலக்க, பின்னர் இவ்வாறு கூறினார். சிங்கள மக்களின் பாதுகாப்பு அக்கறைகள் (Security concerns of Sinhala people) முக்கியமாக உள்ளன. சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதங்களை (Security assurances) விடுதலைப் புலிகள் வழங்குவார்கள் எனில், அவ்வாறான சர்வதேச தொடர்பு கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுத்தும்படி சிங்கள மக்களே பிரதமருக்கோ ஜனாதிபதிக்கோ அழுத்தம் கொடுப்பர். சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அரசாங்கம் அவ்வாறு முனைகிறது" என்று லக்திலக்க கூறியபோது, சற்று வியப்பு ஏற்பட்டதுடன் விரிவாக விவாதிக்க வேண்டிய பலதளங்கள் விரிந்தன. எனினும், கலந்துரையாடலின் சுமுகத் தன்மைகருதி கசப்பான விவாதங்கள தவிர்க்கப்பட்டன. சர்வதேச பாதுகாப்பு ஒத்தழைப்பைப்பெறும் அரசாங்கத்தின் செயற்றிட்டங்கள், சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்ற அந்தத் தேற்றம் சரியானதா என்பதை வரலாறுதான் நிரூபிக்க வேண்டும்.

**நீதி அரசமைப்பு விவகார அமைச்சின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அறிவு ஜீவிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. அதில் பரிமாறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இது.**

அங்கு தொடர்ந்தும் பலவிடயங்களை விரிவாக விளக்கிக் கூற முற்பட்ட லக்திலக்க, விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை (Interim Self Governing Authority) I.S.G.A. அமைப்பதற்கான தீர்வுயோசனைகள் தொடர்பாக தனது கருத்துக்களை முன்வைத்தார். அதற்கு முன்னதாக அத தீர்வுத்திட்ட நகல் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான போது அதை எத்தனைபேர் வாசித்திருந்தீர்கள் எனக்கேட்டார். ஏறத்தாழ நூற்றி ஐம்பது பேருக்கு மேல் இருந்த அந்த சபையில், நான்கு, ஐந்து பேர் மட்டும் தான அதை முழுமையாக வாசித்து அறிந்ததாக ஒத்துக்கொண்டனர். சிங்கள மக்கள் மத்தியிலும் இதே போன்ற அறியாமைகள், தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாத தன்மைகள் உள்ளன என்று குறைபட்டுக் கொண்ட, லக்திலக்க, புலிகளது தீர்வு யோசனைகளில் இருதரப்புப் பேச்சுக்களின்போது ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு கூட்டறிக்கையாக வெளிவந்த விடயங்கள் மீண்டும் தெரிவிக்கப்படவில்லையே என்று ஆதங்கப்பட்டார்.

### புலிகளின் சுயநிர்ணய உரிமை

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள 'சுயநிர்ணய உரிமை' என்பது என்ன அர்த்தத்தைப் பெறுகிறது என்பது புலிகளால் விளக்கப்பட்டிருக்கவில்லை என்று கூறிய சட்டத்தரணி சிரால் லக திலக்க, சுயநிர்ணய உரிமைகள் பற்றிய வரலாற்றை அதன்அந்தந்தக் காலகட்டப் பின்னணிகளை ஆராய்ந்தால், கார்ள் மாக்ஸ் அன்றைய அயர்லாந்துச் சூழ்நிலையைக் கருதி சுயநிர்ணயம் என்ற விடயத்தை விளக்கினார். பின்னர் லெனின், ஸ்ராலின் போன்றோர் முறையே பின்லாந்து, உக்கிரெயின் பிரதேசங்களைக் கருததில் எடுத்து அதை விளக்கினர். சுயநிர்ணயம் பற்றி மாக்ஸிய - லெனிஸிஸ் அடிப்படைகள் இருந்தன. ஆனால், 1914 முதலாம் உலகப் போரின் பின்னர் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி வுட்றோ வில்சன் சுயநிர்ணயம் பற்றி இன்னொரு தளத்தில் விளக்க முயன்றார். அவரது விளக்கத்துக்கு ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் போராட்டங்கள் உரிமைகள் சார்ந்த பிரதிபலிப்பு காரணமாயிற்று. பின்னர் சர்வதேச சட்ட நியமங்கள் சுயநிர்ணய உரிமைபற்றிப் பேசுகின்றன. இறுதியாக இனத்துவ அடிப்படையில் அக சுயநிர்ணய உரிமை (Internal Self determination) வெளிச்சுயநிர்ணய உரிமை (External Self determination) என இரு வகையில் அவ் விளக்கங்கள் அமைகின்றன. இந்தப் பின்புலத்தில் விடுதலைப் புலிகள் தாம் கருதும் சுயநிர்ணய உரிமை பற்றி வரையறுக்கவில்லை என அவர் கூறினார்.

### கடற் கட்டுப்பாடு

விடுதலைப் புலிகளின் இடைக் காலத் தீர்வு யோசனைகளில் கடற் கட்டுப்பாடு (Control of Territorial Water) பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயத்தில் இந்தியா தொடர்பான காரணிகள் (Indian Factors) தென்னிலங்கை சிங்கள மக்களின் பாதுகாப்பு அக்கறைகள் (Factors of Security Concerns of Southern Sinhala masses) சர்வதேச காரணிகள் (International Factors) என்பன பங்காற்றுகின்றன. எந்த அரசும் கடல் கனிமங்கள் தேசிய பாதுகாப்பு அக்கறைகள் சார்ந்த கடலின் முக்கியத்துவம் என்பனவற்றை சமஷ்டி தீர்விலும் விட்டுக்கொடுக்காது என்றார் அவர்.

மற்றைய விடயங்களான நிலம், நிதி, வெளிநாட்டுத் தொடர்புகள், கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களைக் கவனிக்கும்போது அவற்றில் சர்ச்சைகள எழாது. இவை ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணி 2000 ஆம் ஆண்டு சமர்ப்பித்த யோசனைகளிலும் உள்ளன என்றார்.

புலிகளினுடைய இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான தீர்வு யோசனைகள் பற்றி இருவிதமான எண்ணக்கருக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது ஒரு தனிஅரசை நிறுவுவதற்கான விட்டுக்கொடுப்பற்ற இறுக்கமான யோசனைகளாக உள்ளன என்பது முதலாவது எண்ணக்கரு. இரண்டாவது எண்ணக்கரு இவற்றைப் பேச்சு மேசையில் வைத்துப் பேசுவதன் மூலம், அது அடையும் ஓர் இணக்கப்பாடான வடிவத்துடன் புலிகள் சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க முனைகிறார்கள் என்பதாகும் எனவும் லக்திலக்க விளக்கினார்.

### முஸ்லிம்கள் விவகாரம்

மேலும் முஸ்லிம்கள் தொடர்பாக பிரஸ்தாபித்த அவர், வடக்கு முஸ்லிம்கள், கிழக்கு முஸ்லிம்க்ள், நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் என மூவகையினரினதும் பின்னணிகள், பிரச்சினைகள் வெவ்வேறானவை என விளக்கினார். ஒரு பெரும்பான்மை இனத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடி உரிமைகேட்கும் தமிழர்கள், மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம்களின் உரிமைகளை மறுக்கக்கூடாது என்பதை யாழ்ப்பாண முஸ்லிம்களின நிலைமையை சுட்டிக்காட்டி பிரஸ்தாபித்தார். இக்கட்டத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் மீளக்குடியேறுவதற்காகத் தானும் சம்பந்தப்பட்ட பல தரப்பினரும் சேர்த்து எடுத்த முயற்சிகளை விளக்கினார் சிவஞானம்.

தொடர்ந்த கலந்துரையாடலை அடுத்து நீதி, அரசமைப்பு விவகாரம், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் காலிங்க இந்தா திஸ்ஸ, "சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள அரசமைப்பு ரீதியான தடைகள்" என்னும் விடயத்தில் கலந்துரையாடலை ஆரம்பித்தார். இக் கலந்துரையாடலுக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள்துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகளின் தீர்வு யோசனைகளிலிருந்து ஓர் இடைக் காலத் தீர்வையோ, நிரந்தரத் தீர்வையோ பேச்சுக்கள் மூலம் ஏற்படுத்திக் கொள்வதில் 1978ஆம் ஆண்டு ஜே.ஆரால் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்திய அரசமைப்பு ஒரு பாரிய தடையாகும் என அவர் விவரித்தார். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கிடையில் தோன்றியிருக்கும் அதிகார இழுபறி (Power Struggle), மற்றும் எதிரும் புதிருமான இந்திய, அமெரிக்க நலன்களின் போட்டாபோட்டித் தன்மைகள் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்பன, 1978ஆம் ஆண்டு ஜே.ஆர். கொண்டுவந்த அரசமைப்புத் தடையாக உள்ளமை ஆகிய இவற்றையெல்லாம் மீறி, எதிர்கொண்டு ஒரு சமாதானப் பேச்சு மேசை எப்படி எதிர் நீச்சல் போடப்போகிறது என்று ஒரு பெரிய கேள்வியை எழுப்பினார் ஆசிரியர் சங்கத்தின் தமிழ்ப் பிரதிநிதியொருவர்.அதற்கிடையில் மற்றொருவர் எழுந்து ஜே.வி.பி. - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டு எவ்வகையில் சமாதானத்துக்கு உதவப்போகிறது என்று கேள்வி எழுப்பினார். தலைமை வகித்த பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை 1978ஆம் ஆண்டு அரசமைப்பு உள்ளிட்ட எந்த யாப்பிலும் உறுதியளிக்கப்பட்ட எந்த சிறு சலுகைகள் கூட தமிழர்களின் கைக் கெட்டவில்லையே என்று அங்கலாய்த்து உரையாற்றிக் கொண்டிருந்தார். கேள்விகளும், பிரச்சினைகளும், ஆதங்கங்களும், அங்கலாய்ப்புக்களும், விளக்க முயற்சிகளும் அதிருப்திகளுமாக அந்த உயர் மட்டக் கலந்துரையாடல் முடிவுக்கு வந்தது. ★

தொகுப்பு: புவியரங்கன்

---

## பிரமுக வங்கியில் லஞ்சம் பெற்ற 12அரச அதிகாரிகள் கைதாகினர்!

கொழும்பு,பெப்.12

நிதிக் குழப்பத்துக்கு உள்ளான பிரமுக வங்கியில் அரசுக்குச் சொந்தமான பணத்தை வைப்பிலிட்டு அந்த வங்கியிலிருந்து லஞ்சம் வாங்கினர் என்று கூறப்படும் 12 அரச அதிகாரிகள் நேற்றுமுன்தினம் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அரச நிறுவனங்களுக்கு உரித்தான நிதி வைப்புக்களை பிரமுக வங்கியில் வைப்பிலிட்டு அந்த வங்கியிடமிருந்து பெருந்தொகையான பணத்தை இவர்கள் லஞ்சமாகப் பெற்றுள்ளனர் என லஞ்ச, ஊழல் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்ததகவலையடுத்து, இவர்கள் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேல்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர், மேல் மாகாண அபிவிருத்தி நிதியத்தின் கணக்காளர், ஸ்ரீஜயவர்த்தனபுர வைத்தியசாலை நிதி அதிகாரி, மகாவலி ஆலோசனைசபைத் தலைவர் மற்றும் கூட்டுறவு வங்கியின் அதிகாரிகள் என 12பேர் லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் கொழும்பு நீதிவான் சரோஜினி குசலா விஜேவர்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களுக்குப் பிணை அனுமதி வழங்கிய நீதிவான் வழக்கை ஏப்ரல் 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஒ)

## நெடுந்தீவில் மீன்பிடி அமோகம்

நல்ல ரக மீன்களைப் பிடிக்கக் கூடிய காலநிலை நெடுந்தீவுப் பகுதியில் தற்சமயம் நிலவுவதாக அந்தப் பிரதேசக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். நாளொன்றுக்கு சராசரியாகப் பத்து அந்தர் எடையிலான மீன்கள் இங்கிருந்து குறிகாட்டுவான் ஊடாக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவதைக்கானமுடிகின்றது. (ஒ-111)

## திலங்க சுமதிபாலவை எதற்காக தேசிய வைத்தியசாலையில் சேர்த்தீர்கள்?

### சிறை ஆணையாளரிடம் நீதிமன்றம் கேள்வி

கொழும்பு,பெப்.12

ஸ்ரீலங்கா கிரிக்கெட் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் ஆகியவற்றின் தலைவர் திலங்க சுமதிபால தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறித்து விளக்கமளிப்பதற்காக சிறைச்சாலை ஆணையாளர் ரூமிமர் சூக்கை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட திலங்க சுமதிபாலவை சிறைச்சாலை வைத்தியசாலையை விடுத்து தேசிய வைத்தியசாலையில் சேர்க்கும் அளவுக்கு அவரின் உடல்நிலை மோசமாகவில்லை என சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

திலங்க சுமதி பாலவின் வழக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

அரச சொலிசிற்றர் ஜெனரல் நீதிமன்றில் ஆஜராகி திலங்கசுமதி பால தொடர்பாக நீதிமன்றம் விதித்த உத்தரவு சரியாகப் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சரோஜினி குசலா விஜேவர்த்தன எதிர் வரும் 12ஆம் திகதி சிறைச் சாலை ஆணையாளர் ரூமி மர்சூக்கை நீதிமன றில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## மீளக்குடியமர்ந்தோருக்கான வீடமைப்பு நிவாரணத்திட்டம்

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வீடமைப்பு நிவாரணத்திட்டம் ஒன்று உடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் முதற்கட்டமாக யாழ் மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பான மதிப்பீடுகள் திரட்டப்படவுள்ளன.

- இவ்வாறு யாழ். செயலகத்திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவதற்கு அலுவலர்களை நியமிக்கும பணி இடம்பெறுகிறது. இதற்காக மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி சபைகளிலும் கல்வித் திணைக்களத்திலும் கடமையாற்றும் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், படவரைஞர்கள் ஆகியோர் குறித்த விவரங்களை அதற்கென உரித்தான படிவத்தில் நிரப்பி உடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-85)



பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற தும்பளை யோகசாந்தி நிலையத்தினரின் யோகாசனக்கண்காட்சியின் ஒரு காட்சியையும், அந்தக் கண்காட்சியை பருத்தித்துறை கலைஞர் வட்டத்தலைவர் பொன். மகாதேவா, உடற் கல்வி விரிவுரையாளர்கள் புலேந்திரன், அதிபர் எஸ்.ஜெயநாதன் ஆகியோர் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# பஜாஜ் இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து ஒரு **பஜாஜ்** மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. உங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்குக் கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய **பஜாஜ்** மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு. நீங்கள் நாடுவது வேகமா? சிக்கனமா? அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? எதுவானாலும் **பஜாஜ்** வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். மற்றும் **DPMC** யின் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் சேவை, பராமரிப்பு மற்றும் உதிரிப்பாக வியாபார வலையமைப்பினூடாகவும், பிராந்திய அலுவலகங்களூடாகவும் தன்னிகரற்ற வேகமான வாடிக்கையாளர் சேவையையும் **DPMC** யின் ஒன்று திரட்டிய வளங்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவை அனைத்தினாலேயே
**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிளாகத் திகழ்கின்றது.

ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுடனும் ஜக்கெட் ஒன்று இலவசம்.

மேற்படி விலைகள் VAT புற நீங்கலானவை.
மற்றும் விலைகள் முன் அறிவித்தலின்றி மாற்றத்திற்குரியவை.

தன்னிகரற்ற உத்தரவாதம்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி: 4700600.
தொலைநகல்: 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு: 4715050.
இணைய தளம்: http://www.dpmco.com

அதிகாரம் பெற்ற விற்பனையாளர்:
குறிஞ்சி ட்ரேடர்ஸ், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777-979279, 0777-155730

குறிஞ்சி ட்ரேடர்ஸ், 6, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 0777-979279, 0777-155730



pulsar

- 143.43 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- 5 ஸ்பீட் ட்ரான்ஸ்மிஷன்ஸ்.
- பாதுகாப்பான டிஸ்க் பிரேக் முறைமை.

வில‍ை ரூபா 106,158/-



Caliber 115

- 111.6 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு. 90 கி.மீ.
- இக்னிஷன் மற்றும் ஹென்ட்ல் பார் லொக் ஒரே துவாரத்தில்.

விலை ரூபா 78,682/-



Caliber 115
டிஸ்க் ப்ரேக் உடன்

- 111.6 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு. 90 கி.மீ.
- பாதுகாப்பான டிஸ்க் ப்ரேக் முறைமை.

விலை ரூபா 83,255/-



BOXER CT Deluxe

- 99.35 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு. 91 கி.மீ.
- K-Tec தொழில்நுட்பத்துடன் கூடியது.

விலை ரூபா 68,755/-



BOXER CT

- 99.35 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 87 கி.மீ.
- பின் இருக்கையை லக்கேஜ்களுக்காகக் கழற்றலாம்.

விலை ரூபா 67,884/-



BOXER AR

- 99.35 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு. 91 கி.மீ.
- மேலதிக கனதியான இரட்டை க்ரேடில் செஸிகள்.
- K-Tec தொழில்நுட்பத்துடன் கூடியது.

விலை ரூபா 64,400/-



Byk

- 92 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு. 100கி.மீ.
- காற்றுக்கிசைவான அமைப்பு.
- பல ரக, ஒக்டோபரிஸம் பிரதிபலிப்பு ஹெட்லேம்ப்.

விலை ரூபா 58,304/-



Legend

- 145.45 cc 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
- நியம சவாரி நிலைமையில் லீ.க்கு 66 கி.மீ.

விலை ரூபா 88,131/-

mel ads 04/01/3062

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ். சென்.மேரிஸ் வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா நிகழ்வில் வண.பிதா ம.பயஸ் அடிகளார் ஆசியுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை, உதவிப் பங்குத் தந்தை வண.பிதா ம.சரத்ஜீவன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களும் படத்தில் உள்ளனர்.

(படம்: குருநகர்ச் செய்தியாளர்)



கட்டுடை சைவ வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் விழா அண்மையில் நடைபெற்ற போது வித்தியாலய அதிபர் கடவுள் சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பொ.ம.க.முதலியாரும் படத்தில் உள்ளார். (படம்:- சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)



அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. காலஞ்சென்ற நாகமணி ஜீவரத்தினம் என்பவரின் ஞாபகார்த்தமாக அவரின் உறவினர் ஒலிபெருக்கிச் சாதனத் தொகுதியை அதிபர் திருமதி ச.கனகராசாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)



மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும் வைத்தியகலாநிதி அ.யோ.செல்வராசா, பங்குத் தந்தை யே.நிக்சன் டொறெக்ஸ், பாடசாலை அதிபர் என்.உதயகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: மாதகல் செய்தியாளர்)

# கற்றல், கற்பித்தல் சூழலை விருத்திசெய்ய யாழ்.பாடசாலைகளுக்கு ஜப்பான் உதவி

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் ஆரம்ப இடைநிலை மட்டங்களில் விஞ்ஞான, கணித பாடங்களின் கற்றல், கற்பித்தல் சூழலை அபிவிருத்தி செய்வதற்கான பெருந்திட்ட ஆய்வொன்றினை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் (Japan International Co-operation Agency - JICA) மேற்கொண்டுள்ளது. பெருந்திட்ட ஆய்வுக்கு முன்மொழிவுகளை வழங்கும் வகையில் JICA செயற்றிட்டம் பரீட்சார்த்தமாகத் தற்பொழுது 25 முன்னோடிப் பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது. முன்னோடிச்செயற்றிட்டம் இவ்வருடம் மார்ச் மாதம் பூர்த்தியடையவுள்ளது.

கணித - விஞ்ஞான பாடங்களின் மேம்பாடே செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். இருப்பினும், பாடசாலைகளில் முகாமைத்துவ அபிவிருத்தியினூடாக கற்றல், கற்பித்தல் சூழலின் வினைத்திறனையும் பயனுறுத்தித் தன்மையையும் மேம்படுத்தும் வகையில் முன்னோடிப் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு யாவற்றுக்குமான நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

### அணுகுமுறை

JICA செயற்றிட்டத்தின் தனித்துவம் அதன் அணுகுமுறையிலும் நடைமுறைப்படுத்தலிலுமே தங்கியுள்ளது. பாடசாலை மட்டத்தில் அடிமட்டத்திலிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையும் (Bottom up approach) மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பல மட்டத்தினர் பங்கு கொண்டு செயலாற்றும் முறையும் (Participatory approach) இச் செயற்றிட்டத்தின் தனித்துவத்துக்குக் காரணங்களாகும்.

### கெய்சன் செயற்பாடுகள் KAIZAN Activities

KAIZAN என்பது ஜப்பானிய மொழிச் சொல்லாகும். KAIZAN அணுகுமுறையே ஜப்பானியர்களின் துரித அபிவிருத்திக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. KAIZAN என்பது முன்னேற்றத்திற்கான சிறுசிறு மாற்றங்களைச் செய்தலாகும். KAIZAN கல்விச் செயற்பாடுகளினூடாகப் பாடசாலைகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லமுடியும். என்பது திண்ணம்.

முன்னோடிப் பாடசாலைகளில் மேற்படி செயற்பாடுகளை அறிமுகப் படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கென ஒரு செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு SEIKA என அழைக்கப்படுகிறது (School Education Initiative of KAIZAN Activities). இக்குழுவின் தலைவர், அதிபர் ஆவார். மற்றும் செயலாளர், பொருளாளர் பதவிகளை ஆசிரியர்கள் வகிப்பர். அங்கத்தவர்களாகக் கல்வித்தரவட்ட (Quality Education Circle) தலைவர்களும் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் இருப்பர். KAIZAN செயற்பாடுகள் பாடசாலைசார்ந்த சகலரினதும் பொறுபபு என்பது மகுட வாக்கியமாகக் கொள்ளப்படுகிறது. 'KAIZEN is the Top of Everyone'

### 5S அணுகுமுறை

KAIZAN செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திப் பாடசாலையில் முகாமைத்துவ அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கென '5S' என்னும் அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




வேறாக்கல், ஒழுங்குபடுத்தல், துப்புரவு செய்தல், நியமப்படுத்தல், சுயஒழுக்கம் என்ற ஐந்து படிகள் முறையே Seiri, Seiton, Seiso, Seiketsu, Shitsuke எனும் ஜப்பானிய மொழிச் சொற்களால் குறிக்கப்படுதல் '5S' எனப்படும்.

செயற்றிட்டங்கள் யாவும் தத்தமது பாடசாலைத் தேவைகளைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்களினாலேயே தெரிவுசெய்யப்பட்டுத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் JICA செயற்றிட்டத்தின் நல்ல தனித்தன்மையைக் குறிக்கும்.

ஆசிரியர்களும் மாணவர்களும் சகல செயற்பாடுகளிலும் பங்களிப்புச் செய்யும் வகையில் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலை மாணவர்களுக்குப் பெரிதும் உவப்பாக உள்ளது.

### கல்வித்தர மேம்பாட்டு வட்டங்கள் Quality Education Circles (QE Circles)

ஒவ்வொரு பாடசாலைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட செயற்றிட்டங்களை பாடசாலைகள் தோறும் இயங்கும் கல்வித்தர மேம்பாட்டுக்குழுக்களே நடைமுறைப்படுத்தி வருகின்றன. கல்வித் தர மேம்பாட்டுக் குழுக்கள் அமைப்பு மிகவும் தனித்துவம் வாய்ந்தது. வட்ட உறுப்பினர்கள் தாமாகவே முன்வந்து குழுக்களாகி தமது வட்டத்தை அமைக்கின்றனர். தமக்கு விருப்பமான செயற்றிட்டத்தை (பாடசாலைக்குப் பொருத்தமான) தெரிவுசெய்து நடைமுறைப்படுத்துகின்றனர். மாணவர்களும் இவ்வட்டங்களில் அங்கத்துவம் வகிப்பது மாணவர்களுக்குப் பெரிதும் ஊக்கலாக (Motivation) அமைந்துள்ளது.

### செயற்றிட்ட மதிப்பீட்டு முறை

எந்தவொரு செயற்றிட்டத்தின் வெற்றியும் அதன் மதிப்பீட்டு முறையிலேயே தங்கியுள்ளது. இங்கு JICA குழுவினருடன் தேசிய கல்வி நிறுவக அங்கத்தினரும் இணைந்து சகல முன்னோடிப் பாடசாலைகளையும் திட்டமிட்டபடி ஒவ்வொரு மாதமும் தொடர் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கி வருகின்றனர். இம்மதிப்பீட்டு முறைபற்றி நாம் பிரத்தியோகமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. மதிப்பீடு மிகவும் நுண்ணியதாகவும் ஆழமாகவும் அமைந்துள்ளது. முன்னோடிச் செயற்றிட்டத்திற்கு இம்மதிப்பீடு சிறந்த பின்னூட்டலாக (Feed back) அமைந்து செயற்றிட்டத்தை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்கின்றது. இம்முன்னோடிச் செயற்றிட்டம் அதனது இறுதிக் கட்டத்தை எய்திவிட்டது.

### வடமாகாணத்தில் JICA செயற்றிட்டம்

வடமாகாணத்தில் முன்னோடிப் பாடசாலைகளாக கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் KAIZAN கல்விச் செயற்பாடுகளாக 4 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

(I) 5S அணுகுமுறைக்கூடாகப் பாடசாலை முகாமைத்துவ அபிவிருத்தி.

(II) O/L - A/L கணித பாட நிரப்பலுக்கான மாணவர் செயல்நூல்

(III) விஞ்ஞான கணித மூல வள நிலையம்.

(IV) ஆங்கில மொழிமூலம் தரம் 6இல் கணிதம், சுற்றாடற்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இரண்டு செயல் நூல்கள்.

**திருமதி அ.தம்பையா**
*JICA செயற்றிட்ட இணைப்பாளர்,*
*வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை*

இந்த நான்கு செயற்றிட்டங்களும சிறப்பாக முடிவடைந்த நிலையில் இறுதி மதிப்பீட்டிற்குக் காத்து நிற்கின்றன. செயற்றிட்டங்கள் யாவும் மாணவர் மையக் கல்வியையும் சுய கற்றல் வாய்ப்பை அளிக்கும் வகையிலும் அமைந்திருக்கின்றன.

பாடசாலை மட்ட செயற்றிட்டத்திற்குச் சிகரம் வைத்தாற்போல் விஞ்ஞான - கணித மூல வள நிலையம் (Science - Maths Resource Center) உருவாக்கப்பட்டுள்ளமை நோக்கற்பாலானது. இந்நிலையம் யாழ். பிராந்திய மாணவர்களுக்குத் தனது சேவைகளை வழங்கக் காத்திருக்கின்றது.

JICA செயற்றிட்டத்திற் பங்குகொண்டு எமது பாடசாலையை அபிவிருத்திப்பாதையில் இட்டுச்செல்ல எமக்குக் கிடைத்த சந்தர்ப்பம் ஓர் அரிய வரப்பிரசாதமாகும். ✳

# ஐ.தே.க.தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பம்; பிரதமர் தலைமையில் அதிஉயர் குழு

கொழும்பு,பெப்.12

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் வியூகங்களை வகுத்துச் செயற்படுவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அதியுயர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் குழு, தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான குழு, பிரசாரக்குழு என்பவற்றை இந்த அதியுயர் குழுவே தெரிவுசெய்யும்.

இந்த அதியுயர் குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க. பிரதித் தலைவர் அமைச்சர் கரு ஜயசூரியா, ஐ.தே.க. தலைவர் மலிக் சமரவிக்கிரம, பொதுச்செயலாளர் சேனரத் கப்புகொட்டுவ, ஜனாதிபதி சட்டத்தரணி தயாபொல்வெல ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் விசேட குழுக் கூட்டம் சிறிகோத்தாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்குறிப்பிட்ட அதியுயர் குழு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதென நாடாளுமன்ற விவகார அழைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது கட்சியின் 40 ஆசனங்களை ஜே.வி.பி.யினருக்கு தாரைவார்த்து விட்டதால் ஏற்கனவே பதவியில் இருந்த 25 உறுப்பினர்கள் தமது தொகுதிகளை இழந்துள்ளனர். இதனால், அவர்கள் எம்முடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே சில சிரேஷ்ட உறுப்பினர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

புதியவர்களை எமது அணியில் சேர்த்துக் கொள்வது குறித்தும், இணைய விரும்பும் கட்சிகளுடன் பேசுவது குறித்தும் முழு அதிகாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# புதிய பொலீஸ்மா அதிபராக ஹேரத் நியமிக்கப்படலாம்

கொழும்பு,பெப்.12

புதிய பொலீஸ்மா அதிபராக ஜயதிஸ்ஸ ஹேரத் நியமிக்கப்படலாம். பிரதிப் பொலீஸ்மா அதிபரான ஜயதிஸ்ஸ ஹேரத்தை அப்பதவிக்கு நியமிப்பதற்கு ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியப்படுகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் முடிவடைகிறது. எனினும் அவரின் பதவிக்காலத்தை ஜனாதிபதி நீடித்தாலும் அதை அவா ஏற்றுக் கொள்ளமாட்டார் எனவும் ஓய்வு பெற்றுச் செல்வதையே அவர் விரும்புகிறார் எனவும் தெரியவருகிறது.

அவருக்கு அடுத்த படியாக அப்பதவியை வகிக்கக் கூடிய தரத்தில் இரண்டு பேர் உள்ளனர். பிரதிப் பொலீஸ்மா அதிபர்களான சந்திரா பெர்னாண்டோ, காமினி ரந்தெனிய ஆகியோரே இவ்விருவருமாவர். இருபபினும் இந்த இருவரையும் நியமிப்பதற்கு ஜனாதிபதி முற்றாக விரும்பவில்லை எனவும் தெரியவருகிறது.

ஜனாதிபதிக்கு மிகவும் விசுவாசமானவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் பிரதிப் பொலீஸ்மா அதிபரான ஜயதிஸ்ஸ ஹேரத் இருந்து வருகிறார். இதனால், அவரே புதிய பொலீஸ்மா அதிபராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜயதிஸ்ஸ ஹேரத் பொலீஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவது குறித்து பொலீஸ்திணைக்களத்தில் உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

## இலங்கை அரசு

# வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

கடன் இலக்கம்: 2880 சி.இ.

தேசியப் போட்டிக் கூறுவிலை கோரல்

குடிசார் வேலைகள் (Civil Works)

# கேள்வி அறிவித்தல் (ஐ.எப்.பி.)

திகதி: 12-02-2004

ஐ.எவ்.பி. இல.: ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/04
ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/08
ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/09

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து உலகவங்கியின் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
   ஐ.டி.எ (IDA) நம்பிக்கையின் கீழான வசதி.
2. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் வேலைத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

### அட்டவணை 01

| ஐ.எப்.பி.இல.: | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டியகாலம் |
|---|---|---|---|---|
| ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/08 | சாவகச்சேரி நகரசபை சிறிய நீர்விநியோகத்திட்டம் மீளமைத்தல் | 100,000.00 | 800.00 | 05 மாதம் |
| ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/09 | கொடிகாமம் பிரதேசசபை சிறிய நீர்விநியோகத் திட்டம் மீளமைத்தல் | 40,000.00 | 800.00 | 04 மாதம் |

### அட்டவணை 02

| ஐ.எப்.பி.இல.: | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/04 | அரியாலை சித்தி விநாயகர் சிறிய நீர் விநியோகத் திட்டம் மீளமைத்தல் | 33,000.00 | 800.00 | 04 மாதம் |

3. அட்டவணை 01

3.1 மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் மேலுள்ள அட்டவணையிலுள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிற் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்திற் பெறப்பட்ட காசுக்கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களிடமிருந்து 16.03.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.2 ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளு முன் விரும்பின் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 021-222 2654 தொலைநகல் இலக்கம்: 021-222 3410

4. அட்டவணை 02

4.1 மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் மேலுள்ள அட்டவணையிலுள்ளவாறு காசாகசோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிற் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்திற் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 16.03.2004 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.2 ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளு முன் விரும்பின் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர், மாநகரசபை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 021-222 2275 தொலைநகல் இல.: 021-222 2275

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பேரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு *தலைவர், கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 17.03.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
6. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாண குறிப்புகள் 4 ஆம் பந்தியிற் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப்பத்திரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பதும் ஒரு தனி ஒப்பந்தகாரருக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
7. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

10.02.2004.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-33220) (34-21-19-11)

## இலங்கை அரசு

# வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

கடன் இலக்கம்: 2880 சி.இ.

தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

சிறிய குடிசார் வேலைகள் (Small Civil Works)

# கேள்வி அறிவித்தல் (ஐ.எப்.பி.)

திகதி 12.02.2004

ஐ.எவ்.பி.இல. ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/11
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/17
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/18
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/19
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/03
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/05
ஜேஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யுஎஸ்எஸ்/14

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரரிடமிருந்து உலக வங்கியின் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
   ஐ.டி.ஏ. (IDA.) நம்பிக்கையின் கீழான வசதி.
2. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் இலங்கை அவர்களினால், மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.

### அட்டவணை - 01

| ஐ.எவ்.பி.இல. | வேலைவிவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/11 | அராலி வடக்கு, முதலி கோயிலடி, பொன்னாலை சிறிய நீர் விநியோகத் திட்டவேலைகள் மீளமைத்தல். | 16,000.00 | 500.00 | 03 மாதங்கள் |
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/17 | சாவகச்சேரி பிரதேச சபை குழாய்க் கிணறுகள் திருத்த வேலைகள் | 6,000.00 | 500.00 | 02 மாதங்கள் |
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/18 | சாவகச்சேரி பிரதேச சபை திறந்த கிணறுகள் திருத்த வேலைகள் | 17,000.00 | 500.00 | 04 மாதங்கள் |
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/19 | சாவகச்சேரி நகரசபைப் பகுதிக்குட்பட்ட திறந்த கிணறுகள் மீளமைத்தல் | 10,000.00 | 500.00 | 04 மாதங்கள் |

### அட்டவணை -02

| ஐ.எவ்.பி.இல. | வேலைவிவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி (ரூபா) | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/03 | பொம்மைவெளி சிறிய நீர் விநியோகத் திட்டவேலை மீளமைத்தல். | 18,000.00 | 500.00 | 04 மாதங்கள் |
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/05 | (அ) அரியாலைச் சந்தை குழாய்க்கிணறு மீளமைத்தல். (ஆ) நல்லூர் இந்துவிடுத பின்பக்க குழாய்க்கிணறு மீளமைத்தல். (இ) பண்ணை மீன்சந்தைக் குழாய்க்கிணறு மீளமைத்தல். | 2,000.00 | 500.00 | 02 மாதங்கள் |
| ஜே.ஏ/நீர்ப்/சிஎல்ஜி/டபிள்யு எஸ்எஸ்/14 | (அ) நாயன்மார்கட்டு சிறிய நீர்விநியோகத்திட்ட வேலை மீளமைத்தலும், பராமரித்தலும். (ஆ) சட்டநாதர் கோயிலடி சிறிய நீர்விநியோகத் திட்ட வேலை மீளமைத்தல். (இ) கச்சேரி - நல்லூர் வீதி சிறிய நீர்விநியோகத்திட்ட வேலை மீளமைத்தல். | 10,000.00 | 500.00 | 03 மாதங்கள் |

3. அட்டவணை 01

3.1. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் மேலுள்ள அட்டவணையிலுள்ளவாறு, காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிற் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft)அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 16.03.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இருபிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.2. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமுன் விரும்பின் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**செட்டித்தெரு,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இலக்கம்: 021-2222654
தொலைநகல் இலக்கம்: 021-2223410

4. அட்டவணை 02

4.1. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் மேலுள்ள அட்டவணையிலுள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக்கட்டளையாகவோ (Money Order) மாவட்டச் செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 16.03.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இருபிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.2. ஆர்வமுள்ள, தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமுன் விரும்பின் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
தொலைபேசி இலக்கம்: 021 - 222 2275.
தொலைநகல் இலக்கம்: 021 - 222 2275.

(C(33228)) (26-13-39-24)

(12.ஆம் பக்கம் பார்க்க)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# அலுவலக உபகரணங்களின் விற்பனையில் முத்திரை பதித்த 'ரெப்ரோகிரபிக்ஸ்'

அலுவலக உபரணங்களை விற்பனை செய்வதில் முன்னணி வகிக்கும் 'ரெப்ரோகிரபிக்ஸ்' (தனியார்) நிறுவனம் (REPROGRAPHICS PVT. Ltd.) யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது.

திறப்புவிழா நிகழ்வில்...



யாழ். நகரில் இயங்கும் லக்ஷ்மி ஏஜென்ஸி (LUKSHMEE AGENCY) நிறுவனத்துடன் இணைந்து இந்த நிறுவனம் தனது கிளைஒன்றை யாழ். ஸ்ரான்ஸி வீதியில் கடந்த 5ஆம் திகதி திறந்தது.

இந்த நிறுவனத்தின் பிரதம அதிகாரி சிரான் டி மெல், முகாமையாளர் எஸ்ரவீந்திரன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தமது நிறுவனத்தின் பணிகள், நோக்கம் என்பன குறித்து சிரான் டி மெல் விளக்கம் அளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

கடந்த 12 வருடங்களாக ஏராளமான வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டு செயற்படும் எமது நிறுவனம் கண்டி, காலி ஆகிய இடங்களில் கிளைகளைக் கொண்டுள்ளது. தற்போது மூன்றாவது கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது. அத்துடன் கிழக்கு மாகாணம் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட முகவர்களைக் கொண்டு எமது நிறுவனம் பரந்துபட்ட சேவையை வழங்கிவருகின்றது.

ஜப்பான், கொரியா, சீனா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பத்துக்கும்மேற்பட்ட உபகரணங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்துவருகின்றோம்.

இலங்கையில் பாவனையில் உள்ள 'லெமினேடிங்' 'பெயின்டிங்' துறைகளில எமது நிறுவனத்தின் உபகரணங்கள் முன்னணி வகிக்கின்றன.


'கொனிக்கா' போட்டோப் பிரதி இயந்திரம், 'டிமிகொம்' ரெலிபோன் சிட்டையிடும் இயந்திரம், புத்தகம் கட்டும் இயந்திரம் போன்ற சிறப்பான தரம்கொண்ட உபகரணங்கள் எமது நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுகின்றன.


கடந்த காலத்தில் நடந்த யுத்தம முடிவடைந்து அபிவிருத்திப் பாதையில் குடாநாடு சென்று கொண்டிருக்கிறது. இந்தநிலையில் தொலைத்தொடர்புச் சேவையைக் குடாநாட்டில சீராக்க எமது நிறுவனத்தின் சேவை இங்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எமது நிறுவனம் பொருள்களை விற்பதோடு மட்டும் தனது பணியை நிறுத்திக்கொள்வதில்லை.

விற்பனை செய்யும் பொருள்களுக்கு ஒருவருட உத்தரவாதம் வழங்குகின்றோம். திறமையான தொழில் நுட்பவியலாளர்களைக் கொண்டு உயர்ந்த தரத்திலான தொழில்நுட்ப சேவையும் வழங்குகின்றோம். எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் இயந்திரங்களை வாடிக்கையாளரின் இடத்தில் பொருத்தி பின்னர் அது தொடர்பாகப் பயிற்சிகளையும் வழங்குகின்றோம். அத்துடன் விற்பனை செய்யும இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்களையும் கிளைகள் மூலம் விற்பனை செய்கின்றோம்.

தெற்கு, கிழக்குப் பகுதிகளில் முன்னணி வகிக்கும் எமது அலுவலக உபகரணங்கள் குடாநாட்டு மக்களுக்கும் பயன் அளிப்பவையாக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக - விளங்கும் - என நம்புகிறோம் - என்றார் அவர்.

(ஒ-3)









# அரச வேலைக்குக் காத்திருக்காது கைத்தொழிலில் ஈடுபடுங்கள்!

## வணிகர் கழக முன்னாள் தலைவர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.12

அரசு, வேலை தரும் என்று காத்திருக்காது, இளைஞர், யுவதிகள் கைத்தொழில்துறையில் ஈடுபடவேண்டும்.

- இவ்வாறு யாழ். வணிகர் கழக முன்னாள் தலைவர் இ.ஜெயசேகரன் அறிவுறுத்தினார்.

யாழ். வணிகர் கழக அலுவலகத்தில் உள்ளூர் உற்பத்தியான 'பேர்வலைட்ஸ்' (FAVOR LIGHTS) சவர்க்காரத் அறிமுகம் தொடர்பான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உள்ளூர்ப் பொருளாதார உற்பத்தித்துறையில் அபிவிருத்தியடையும் நாடுகளே முன்னேறிச் செல்கின்றன.

அந்த வகையில் குடாநாட்டில் உள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி எமது இளைஞர்கள் உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

படித்த பட்டதாரிகள் பலர் வேலையின்றி உள்ளனர். அவர்கள் தமக்கு அரசவேலை எப்போது கிடைக்கும்; அரசாங்கம் வேலை வழங்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள. இது காலத்தை வீணாகக் கழிக்கும் செயலாகும். அவர்கள் இப்படிக் காலத்தைக் கழிக்காமல் சிறுகைத்தொழில் உற்பத்திகளில் ஈடுபடவேண்டும்.

பட்டதாரிகள் தொழில் துறையில ஈடுபட 20 லட்சம் ரூபாவரை கடன் வழங்க வங்கிகள் தயாராகவுள்ளன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்த இளைஞர், யுவதிகள் முன்வரவேண்டும்.

கடந்த காலத்தில் போர் காரணமாக வர்த்தகம் மற்றும் உற்பத்தித் துறைகளில் நாம் பெரும்பாதிப்புக்களைச் சந்தித்தோம். இப்போது நிலவும் சமாதானச் சூழலைப் பயன்படுத்தி, பாதிப்புகளைச் சீர்செய்து முன்னேற வேண்டும்.

இதற்கு உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவது அவசியமாகும் - என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-7)

# மின்சாரச் செலவைக் குறைக்கும் சி.எவ்.எல். மின் குமிழ்கள்

மின்சார செலவைக் குறைக்க வகைசெய்யும் சி.எவ்.எல். (C.F.L.) மின் குமிழ்களை இலங்கை மின்சார சபை உத்தரவாதத்துடன் மின்சாரப் பாவனையாளர்களுக்கு விநியோகித்து வருகிறது.

இதன் பிரகாரம் யாழ். குடாநாட்டிலும் இச்சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின சுன்னாகம் பணிமனையில் கடந்த மாதம் வைபவரீதியாக இந்தச் சேவை விஸ்தரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதனை பிரசிடன்ற் (President) ரக சி.எப்.எல். மின்குமிழ்கள் மற்றும் பலவித மின் குமிழ்களை நாடெங்கும் விற்பனை செய்யும் 'மைலன்' விநியோக நிறுவனம் சிங்கப்பூரைச் சேர்ந்த 'பிரசிடன்ஸ் லைற்ஸ்' நிறுவனம் (President Lights Pte. Ltd., SINGAPORE) உடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை மின்சார சபையின் இத திட்டத்தில் 'பிரசிடன்ற் சி.எப்.எல்.' (PRESIDENT CFL) மின்குமிழ்கள் சேர்க்கப்பட்டமைக்கு 'ISO 9000' தராதரம் பெற்ற தொழிற்சாலைகளில் CE, EMC அங்கீகாரம் பெற்ற மூலப் பொருள்கள் மூலம் அவை தயாரிக்கப்படுவதேயாகும். அத்துடன் இந்த மின் குமிழ்கள் மட்டுமே இலங்கைத் தர நிர்ணய சபையின் (SLSI) சிறந்த சக்தி சேமிப்பை அடையாளப்படுத்தும் பிரிவின் கீழ், அதியுயர் தெரிவான ஐந்து நட்சத்திரக் (FIVE STAR) குறியீட்டு அந்தஸ்தை பெற்றுள்ளன.



சி.எவ்.எல். மின்குமிழ்கள் விநியோகம் குடாநாட்டில் விஸ்தரிக்கப்படுவதற்கான நிகழ்வில் பாவனையாளர் ஒருவருக்கு 'பிரசிடென்ட்' நிறுவனப் பிரதிநிதிகள் மின் குமிழ்களை வழங்குகின்றனர்.

'பிரசிடென்ற் சி.எப்.எல்.' மின்குமிழகள், ஒருவருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு பிந்திய சிறந்த சேவையையும் அளிப்பதால் இன்று இலங்கையில் முன்னணி வகிக்கும் ஒரு ரகமாகத் திகழ்கின்றது. மின்சாரப் பாவனையாளர்கள் அனைவரும் முழுமையான பணம் செலுத்தப்பட்ட உங்கள மின்சாரப் பட்டியலையும் தேசிய அடையாள அட்டையையும் சுன்னாகம் பிரதேச பணிமனையில் காண்பித்து ஆகக் கூடியதாக நான்கு மின் குமிழ்களைப் பெற்று உங்கள் வீட்டின் மின்சார செலவை 80 சதவீதத்தால் குறைக்கலாம். இந்த மின்குமிழ்களைப் பெற எந்த முற்பணமும் அளிக்கத் தேவையில்லை.

இதன் பெறுமதி 12 மாதங்களுக்கு சிறிய தொகை மூலம் எவ்வித வட்டியும் இன்றி அறவிடப்படுவதால் இதன் முழுப் பயனையும் பல இலட்சக்கணக்கான மக்கள் நாடெங்கும் அனுபவித்த வண்ணம் உள்ளனர்.

## தொழில் வளம்

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில்

# பெப்.1 முதல் 10 நாள்களில் 6,605 பேருக்குச் சிகிச்சை

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த மாதத்தில் நேற்றுமுன்தினம்வரை 6 ஆயிரத்து 605 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். வைத்தியசாலைப் புள்ளிவிவரங்கள் மூலம் இது தெரியவந்துள்ளது.

கூடுதலான நோயாளர்கள் சளி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றுக்குச் சிகிச்சைபெற்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதத்தில் யாழ். போதனா மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் 24 ஆயிரத்து 136 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் நாள்தோறும் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகக் கூறப்படுகிறது.

வெளிநோயாளர்கள் மற்றும் உள் நோயர்கள் சிகிச்சை பெறுவதற்கு வரிசையில் நிற்கும் நிலை காணப்படுகின்றது. யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் நோயாளர்கள் காலை 7 மணியிலிருந்து சிகிச்சைக்காகக் காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

(ஒ-ரி)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'முயற்சி' திறன்விருத்தி மையத்தினால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சியைப்பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் சனி காலை 10 மணிக்கு நிறுவனத் தலைவர் அநல்லதம்பி தலைமையில் நிறுவனக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி மா.தியாகராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-10)

## கனகதுர்க்கை கணனி நிலைய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.12

இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய இலவசக்கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் முதலாவது அணி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே முதலாம் அணி மாணவர்கள் அனைவரையும் நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுமதி அட்டைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-4)

## மகளிர் தினத்தையொட்டிப் போட்டிகள்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர் குழு இவ்வாண்டும சர்வதேச பெண்கள் தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. மகளிர்தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப்போட்டிகளும் சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான குழு நடனப்போட்டியும் சிறுவர் பாடசாலை பாலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் சங்க மகளிர் அங்கத்தவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (ம-17)

கசிப்பு உற்பத்திக் குற்றச்சாட்டில்

# குடும்பப் பெண்கள் உட்பட 6 பேருக்கு விளக்கமறியல்

கசிப்பு உற்பத்தி செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட குடும்பப்பெண்கள் ஐவர் உட்பட 6 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி செய்தமை, கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கொக்குவில், ஆனைக்கோட்டை மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளில் 6 பேரை யாழ். மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்தனர். அவர்கள் யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். இவர்களில் கொக்குவில் மேற்கு, ஓட்டுமடம், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூன்று பெண்களையும் குருநகரைச் சேர்ந்த ஆண் ஒருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, அரியாலை, ஆனைக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் இருவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-5)

# கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற அதிபரும்,
நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவருமான

## நாகமுத்து சங்கரப்பிள்ளை

அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கம்.
நெடுந்தீவு. (சி-33222) (26-13-39-24)

தலைவர், பணிப்பாளர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15 - 08 - 1932



உதிர்வு
14 - 01 - 2001

## அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)

திதி: 12.02.2004 ஷஷ்டி

*அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் பாசத்தின்*
*தனிவிளக்காய் வாழ்ந்து எங்கள் குடும்பத்தின்*
*ஒளிவிளக்காய் எல்லோரையும் பெருமையுடன்*
*வழி நடத்தி எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே!*
*நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மூன்றாண்டுகள்*
*சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும்*
*எம் நெஞ்சத்தில் நின்று நிலைத்திருக்கும்.*

(28362)(35-13-39-24)

*9/1, சுப்பிரமணியம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
19 - 05 - 1949



விண்ணில்
06 - 02 - 1999

## அமரர் சின்னத்துரை கனகரத்தினம்

(காங்கேசன்துறை)

திதி:- 12.02.2004

ஆண்டுகள் ஐந்து கடந்திட்ட போதிலும்
ஆண்டவன் நீங்களாய் இருந்தநிலை கடக்கவில்லை!
பூண்டதோர் புன்னகை முகமெங்கள் முன்னல்லால்
மாண்டதோர் நினைவெங்கள் மனதிலும் வந்ததில்லை!
நீண்டதோர் பிரிவெமக்குத் தந்தீர்கள் அப்பா!
தாண்டவோ முடியவில்லை தங்களின் பாசத்தை.
ஓம் சாந்தி!

*172,பொற்பதி வீதி,*
*கொக்குவில்.* (28364)(35-13-39-24)

பிரிவால் துயருறும்:
மனைவி - பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் சிவபாதம்

துன்னாலை வடக்கு, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் சிவபாதம் அவர்கள் நேற்று (11.02.2004) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதம் ஆசிரியரின் அன்பு மனைவியும் நந்தாவதி, கெங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற குலநாயகசிங்கம், விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் குமாரகுலசிங்கம், விஜயகுலசிங்கம், ஜெயகுலசிங்கம், சூரியபிரபா, ராஜகுலசிங்கம், யமுனா, ஜீவகன், ராதிகா, மணிமேகலை, ஜெயச்சந்திரன், மனோகரன், பாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யாதேவ்குலசிங்கம், கஸ்மீரா, விஷ்ணுகுலசிங்கம், பாரத்குலசிங்கம், யாழினி, ஆத்மி, ஆகாஷ், ஆதர்ஸ், அபிலாஷ், வைஷ்ணவி, தக்ஷ்ணவி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கியான்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கக்கடை ஒழுங்கை,*
*துன்னாலை, கரவெட்டி.* (28363)(34-13-39-24)

தகவல்:
கு.விஜயகுலசிங்கம் (பேரன்).

# ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.12

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்டப் பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

'தாயுமான சுவாமிகளின் சிந்தனைகள்' எனும் விடயம் பற்றி மனோஜா ஐயாத்துரை சொற்பொழிவாற்றுவார். (ஒ-10)

நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடும்

# 'குமுதினி' படகின் திருத்தப் பணிகள் தாமதமாவதால் மக்கள் விசனம்

நெடுந்தீவு,பெப்.12

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட 'குமுதினி' படகு மீண்டும் சேவையில் ஈடுபட சுமார் இரண்டு மாதங்களுக்கும் மேலாகும் எனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள இந்தப் படகின் திருத்த வேலைகள் இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் படகு, திருத்தவேலைகளுக்காகக் கரையில் ஏற்றப்பட வேண்டியுள்ளது.

ஆனால், அந்தப் பணி கூட இன்னமும் இடம்பெறவில்லை. இதனால், தற்சமயம் குமுதினிப்படகு சேற்றில் புதையுண்டு வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-111)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 551 |
| --- | --- |
| திகதி | 10.02.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4519461-4534343

வெற்றி இலக்கங்கள் **16 18 41 48**

லக்கினம்
மீனம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 2,364,250/-
வெல்லப்பட்டுள்ளது.



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
| --- | --- | --- | --- |
| 1 இல | 326,680 | 10 | 3,266,800 |
| 2 இலக்கங்கள் | 30,050 | 20 | 601,000 |
| 1 இல + லக்கினம் | 29,900 | 30 | 897,000 |
| 2 இல + லக்கினம் | 2,666 | 100 | 266,600 |
| 3 இலக்கங்கள் | 817 | 500 | 408,500 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 2,364,250 | 2,364,250 |
| மொத்தம் | 390,186 | - | 8,449,150 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.8,449,150/-

தொடர் இல. 5503602க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 பெப்பிரவரி 13ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4526055-6-45
4519619-1-72
4525062-6-31
4523291-7-53
4520227-0-45

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
### வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
கடன் இலக்கம்: 2880 சி.இ.,

தேசியப் போட்டிக் கூறுவிலை கோரல்
சிறிய குடிசார் வேலைகள் (Small Civil Works)

# கேள்வி அறிவித்தல் (ஐ.எப்.பி.)

திகதி 12.02.2004

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 45 நாள்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பேரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு *தலைவர், கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 17.03.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டுத் திறக்கப்படும்.
6. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாண குறிப்புகள் 3 ஆம் பந்தியிற் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப்பத்திரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பதும் ஒரு தனி ஒப்பந்தகாரருக்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
7. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

செ.பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

10.02.2004.
(C/33228) (26-13-39-24)

நாட்டின் நீதித்துறையின் உயர்மட்டத்தில் நிலவும் சீர்கேடுகள் குறித்து 'ராவய' வார இதழ் ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

# நீதித்துறையில் நிலவும் சீர்கேடுகளுக்குப் பொறுப்பேற்பவர் யார்? —— வியெஸ்ரி

'ரேலிகொம்' நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலாவுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை, நாட்டின் நீதியான நிர்வாகத்தில் இடம்பெற்று வரும் ஊழல்களுக்கு உதாரணங்களிலொன்று எனக் குறிப்பிடமுடியும். விடுமுறை தினமான போயா நாளொன்றின்போது திலங்க சுமதிபாலா மீதான வழக்கை விசாரித்ததுடன் சகல குற்றச்சாட்டுக்களின்றும் அவரை விடுவித்துத் தீர்ப்பு வழங்கிய சூதாட்டப் பிரியரான மேலதிக நீதிபதி அவரது நடவடிக்கை காரணமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அந்த மேலதிக நீதிபதிக்கெதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

### சட்டத்தரணிகள் மீது விசாரணை

இவற்றுக்கெல்லாம் மேலாக முதன்முதலாக போயா தினமொன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின்போது திலங்க சுமதிபாலாவுக்காக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவருக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விருவரில் ஒருவர் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் என்பதுடன், மற்றவர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் பிரதம வழக்குத் தொடுநர் மட்டுமன்றி லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றியவர் என்பதும் சுவாரஸ்யமானதொரு விடயமாகும்.

இதனிடையே இச்சம்பவத்தில் நீதிமன்றத்தினதோ அல்லது சட்டத் தொழில்துறையினதோ கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென்ற விதத்தில் பிரதம நீதியரசர் கருத்து வெளியிட்டுள்ளார் என்று வெளிவந்த தகவல்கள் விளம்பரம் தேடும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன.

### பிரதம நீதியரசர் மீதும் குற்றச்சாட்டு

நீதிமன்ற நடவடிக்கைகள் முறையற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதில் சம்பந்தப்பட்ட அனைவரையும்விட நீதித்துறையின் தலைவராகவும் நிர்வாகியாகவும் செயற்படும பிரதம நீதியரசரே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கக் கடமைப்பட்டவராவார். ஆனால், அப்பிரதம நீதியரசா கூட இன்று குற்றவிசாரணைப் பிரேரணையொன்றை எதிர்நோக்கியுள்ள நிலையில் கடமையாற்றி வருகின்றார். பிரதம நீதியரசருக்குகெதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்பதை நாம் மறக்கமுடியாதுள்ளது. அதுமட்டுமன்றி, அவருக்கெதிராக தொடுக்கப்பட்டுள்ள நான்கு வழக்குகளின் விசாரணை ஜெனீவாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. மற்றொரு புறம், ஏனையவர்களின் தொழில்சார் குற்றங்கள் தொடா பாக இறுக்கமான நிலைப்பாட்டைக் கைக்கொள்ளும் ஒருவராகத் தன்னை இனங்காட்டிக் கொள்பவராகப் பிரதம நீதியரசர் இயங்கி வந்துள்ளார். ஆனால், அவர் பிரதம நீதியரசராக நியமனமான வேளையில் அவருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரு குற்றப்பிரேரணைகள் மீதான விசாரணைகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலையில் இருந்ததாகவும் பிரதம நீதியரசரான சரத் நந்த சில்வா அவ்விரு வழக்குகளும் விசாரணை செய்யப்பட்டுவந்ததொரு சந்தர்ப்பத்திலேயே பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. அவ்விதம் அவர் பிரதம நீதியரசராக நியமனம் பெற்றதன்பின்னர் தமக்கெதிராக இடம் பெறறுவந்த இரு வழக்கு விசாரணைகளையும் பின்தள்ளிப்போட நடவடிக்கை மேற்கொண்டமையை இலகுவில் மறந்து விடமுடியாது.

### அபகீர்த்தி

மறுபுறத்தில் சட்டத்தரணி ரியென்சி அரச குலரத்ன வழக்கறிஞர் தொழிலுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி விட்டார் என அவருக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்படுவது இது முதற் தடவை அல்ல.

தனது மைத்துனரொருவருக்கு எதிரான பணமோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய கோப்புக்களை தம்வசம் மறைத்து வைத்துக் கொண்டு, குறிப்பிட்ட அம்மைத்துனர் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல உதவியதாக ரியென்சி அரச குலரத்னவுக்கு எதிராக முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் அவரது தரப்பில் பகிரங்கமாக நீதிமன்றத்தில் தோன்றி சரத் நந்த சில்வா வாதாடியுள்ளார்.

அதன் பின்னர் தமது பதவிக்கு இழுக்கு ஏற்படும் வகையில் நடந்துகொள்வதான குற்றச்சாட்டுக்கள் காரணமாகவே அரச குலரத்ன லஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான ஆணைக்குழுவில் வகித்து வந்த பதவியையும் கைவிட நேர்ந்தது. இவ்வித நடவடிக்கைகள் மூலம் அரசு குலரத்னவுக்கு தவறிழைக்கச் சந்தர்ப் பம் வழங்கி, அத்தவறுகள் பெரிதாகும்வரை காத்திருந்து மிகத் தாமதமாக ரியென்சி அரச குலரத்னவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளதாகத தெரியவருகின்றது.

### நீதித்துறை சீர்கேடுகள்

நீதித்துறை நடவடிக்கைகளில் ஊழல்கள் இடம்பெறுவதாக எண்ணுவதற்கான மற்றொரு உதாரணமாக நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டையும் குறிப்பிட இயலும். நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பிரதம அதிகாரி போன்றே இரண்டாவது நிலையிலுள்ள அதிகாரியும் தாம் மேற்கொண்ட ஊழல் நடவடிக்கைகள் காரணமாக தத்தமது சேவையினின்றும் வெளியேற்றப்படும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளார். இவ்விதம் தவறான வகையில் தமது பதவி அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யும் பாங்கு கொண்ட இவ்விருவரும் இத்தகைய பொறுப்புமிக்கதும், கௌரவம் மிக்கதுமான பதவிகளுக்கு எவ்வாறு நியமனம் பெற முடிந்தது? நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவி வகித்தவர் பெயர்பெற்ற சண்டியர் என்பது மட்டுமன்றி அவருடன் மிக நெருங்கிய ஒட்டுறவுடன் பிரதம நீதியரசர் பழகி வந்திருக்கிறார் என்பதும் சுவாரஸ்யமான விடயமாகும்.

### சமய நிகழ்வுகள்

பிரதம நீதியரசர் சார்பாக மேற்கொள்ளப்பட்ட சமய நிகழ்வுகள் யாவற்றையும் முன்னின்று திட்டமிட்டு நடத்தி முடிப்பவராக நம்பிக்கைப் பொறுப்பாளர் இயங்கி வந்துள்ளார். இநநம்பிக்கைப் பொறுப்பாளர் 13 தடவைகள் பிரமுக வங்கியிடமிருந்து 19 லட்ச ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற்ற தகவல் வெளிவந்த பின்னரும் கூட இவ்விருவர் மத்தியிலும் நிலவிவந்த நெருக்கமான நட்பில் தொய்வேதும் ஏற்படவில்லை. அதன் பின்னர் திலங்க சுமதிபாலாவின் பாதுகாப்பின் பொருட்டு 'கசினோ' சூதாட்டப் பிரியரான மேலதிக நீதியரசருக்கு 80 லட்ச ரூபா பணம் லஞ்சமாக வழங்கப்பட்ட விவகாரத்தில் ஏற்பாட்டாளராக இநநம்பிக்கைப் பொறுபபாளாரே செயற்பட்டுள்ளார்.

### யார் பொறுப்பு?

நீதித்துறையில் நிலவும் இத்தகைய நியாயப்படுத்த முடியாத நடவடிக்கைகளுக்கான பொறுப்பை நாட்டின் முக்கிய இரு அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, அனைத்து முன்னணிக் கட்சிகளும், குறிப்பாக ஊழலற்ற நிர்வாகம் குறித்து வரிந்து கட்டிக்கொண்டு அறிக்கைகள் வெளியிடும் ஜே.வி.வியும் கூட ஏற்றுக்கொளளல் வேண்டும். நாட்டின் நாடாளுமன்றம் முறைப்படி இயங்காத நிலை உருவாகுமானால் நாட்டின் ஜனநாயகம் என்ற தீபம் அணைந்து போகும் நிலை ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.

★

---

# போரும், கல்வியும்தான் தமிழரின் இரு விழிகள்

## சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரை

வடமராட்சி கிழக்கு,பெப்.12

"போரும் கல்வியும் தமிழர்களின் இரு விழிகள். உலகம் நவீன அறிவியலை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதற்கேற்ப நாமும் எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்"

மருதங்கேணிக் கோட்டத்தில் தமிழீழ மாணவர் அமைப்பினால் அப்பகுதி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட கணனிப் பயற்சி வகுப்பின் நிறைவு நாளன்று நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் தமிழழ மாணவ அமைப்பின் பொறுப்பாளர் ராணிமைநதன் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வைபவம் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப பொறுப்பாளர் கௌரி தலைமையில் மருதங்கேணி இ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

ராணிமைந்தன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ மாணவர் அமைப்பின் சின்னம் கணனிக்குள் இருந்து புலி பாய்வது போன்று, 1993ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. அக்காலத்தில் எமது பிரதேசத்தில் கணனிப் பாவனை இல்லாதிருந்தகாலம். எமது தலைவரின் தூர சிந்தனை இதனை எடுத்துக்காட்டுகின்றது. நவீன உலகின் கல்விக்குள் நாம் படிப்படியாக முன்னேறிச் செல்லவேண்டும் என்பதே தலைவரின் விருப்பமாகும் - என்றார்.

கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி உரையாற்றும் போது -

போராட்டத்தைத் தாங்கி நின்று, அது வெற்றிபெற உழைத்தவர்கள் வடமராட்சி கிழக்கு மக்கள். படகுகள் மூலம் போராளிகளையும், ஆயுதங்களையும், வெடிப்பொருள்களையும் கடல்வழியாக எடுத்துவந்து குடாரப்பில் நாம் தரையிறங்கி வெற்றிகளைக் குவிக்க இம்மக்கள் உதவினார்கள். இவர்களுக்கு பல வழிகளிலும் உதவ வேண்டியது எமது கடமையாகும் - என்றார்.

இவ்வைபவத்தில் பொதுச்சுடரினை தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தத்துறைப் பொறுப்பாளர் நரேன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகள் தளபதி மங்களேஸ் ஏற்றினார்.

பயிற்சியினைப் பூர்த்தி செய்த 250 மாணவர்கள், ஆசிரியர்களுக்கு கடற்புலிகள் தளபதி மஙகளேஸ் சான்றிதழ்களை வழங்கினார். (ஐ-182)



யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய அரசியல் கல்விப் பயிற்சி நெறி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான வைபவரீதியான நிகழ்வில் ஜேர்மன் அரசின் வதிவிடப் பிரதிநிதி கூருலஸ் ஸ்ரெயின், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் க.யோகராஜன், சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், திட்ட அதிகாரி துஷாரா வன்னியாராச்சி ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர்கள் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

(படம்: அலுவலகச் செய்தியாளர்)

### இயக்கச்சியில் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய 'நிதர்சனத்தின் புத்திரர்கள்' என்ற நூலின் அறிமுக விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும்.

அதிபர் திருமதி இராசம்மா இராசரத்தினம் விழாவுக்கு தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும், சிறப்பு விருந்தினராக பளைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.கைலாயபிள்ளையும் கலந்து கொள்வர். (ஐ)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு விரைவில் நியமனங்கள்

தென்மராட்சி,பெப்.12

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிடமாகவுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளில் சில விரைவில் நிரப்பப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பதவிக்கு நியமனம் வழங்குவதற்கு மாகாண ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார் என்றும் - மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழு விரைவில் இந்த நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ஒ-117)

# மருதங்கேணியில் இம்முறை சிவராத்திரி விழா ஏற்பாடு

வடமராட்சி,பெப்.12

மகாசிவராத்திரி விழாவினை எதிர்வரும் 18ஆம் திகதி வெகுசிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாட்டினை மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் கலாசாரக்குழு மேற்கொண்டு வருகின்றது.

மகாசிவராத்திரி விழா இம்முறை உடுததுறையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்களினதும், பிரதேச கலாசாரப் பேரவையினதும் கலைநிகழ்ச்சிகள், சமயச் சொற்பொழிவுகள், பட்டிமன்றம் ஆகியன இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாட்டினை மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின கலாசார உத்தியோகத்தர் செல்வி அ.மிலாசினி மேற்கொண்டு வருகின்றார். (ஐ-182)

# மெய்வன்மைப் போட்டிகள்

தெல்லிப்பழை,பெப்.12

மல்லாகம், கோட்டைக்காடு அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபா திருச்சி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10-150)

★ ★ ★

தெல்லிப்பழை,பெப்.12

ஏழாலை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் அ.நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் கணக்காளர் ந.யோகேந்திராசா கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-10-150)

★ ★ ★

கோப்பாய்,பெப்.12

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆரம்பப் பிரிவின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அரச அதிபரின் பிரத்தியேகச் செயலாளர் த.நடராஜா கலந்துகொள்வார். (ஒ-72)

★ ★ ★

வரணி,பெப்.12

வரணி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா ந.ரவிராஜ் கலந்துகொள்வார். (ஐ-10-117-170)

## மாகாணசபை ஊழியர்கள் இடமாற்றம்

கைதடி,பெப்.12

யாழ்.மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் மாகாண சபையைச் சேர்ந்த ஏழு லிகிதர்களுக்கு உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக செயலாளரினால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன. பிரதேச செயலகங்கள் தற்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குவதனாலேயே மாகாண சபையைச் சேர்ந்த இவ் ஊழியர்கள் அங்கிருந்து மாகாண சபையின்கீழ் உள்ள திணைக்களங்களுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஒ-75)

## வரணியில் தையல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,பெப்.12

வரணி மகா வித்தியாலயத் தில் முறைசாராக்கல்வித் திட்டத் தின் கீழ் தையல் பயிற்சி வகுப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பங்குபற்ற பாடசாலையைவிட்டு விலகிய மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் வித்தியாலயத்தில் ஒப்படைக்குமாறு வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஒ-117)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### 12.02.2004

HAPPY BIRTHDAY



## செல்வி வ.சங்கவி

சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச் சேர்ந்த திரு.திருமதி வடிவேலு- சத்தியபாமா தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி சங்கவி அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (12-02-2004) வியாழக்கிழமை கனடாவில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அம்மப்பா, அம்மம்மா, சித்தா, ரூபன் மாமா, சத்தியன் மாமா, சீலன் மாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் ஸ்ரீமீனாட்சி அம்மன் அருள்பெற்று சீருஞ்சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

தகவல்:
து.சத்தியசீலன்
(மாமா).

*சாவகச்சேரி.* (28388)(32-14-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர்
பிரதேச செயலக கிராம
அபிவிருத்தி உத்தியோகத்தர்

### உயர்திரு.மகானந்தன் அழகேந்திரன்

அவர்கள் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்திசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக 19.01.2004 இல் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டதையிட்டு அவரை உளமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேலும் சிறந்தமுறையில் தொடர இறை ஆசிவேண்டிப் பணிகின்றோம்.

யாழ். மாவட்ட
கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம். (28390)(37-14-18-32)

## வேலை வாய்ப்பு

(ஆண் / பெண் இருபாலாருக்கும்)

1. **Hardware Technicians** - (Assembling, Trouble Shoohing, S/W, H/W- Maintenance)
2. **Web Designers** - (HTML, Frant Page, Dream Weaver, Photo Shop)
   VB Script, Java Script, ASP, JSP, Php - மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.
3. **Type Setters** - (அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
4. **Programmers** - (VB, Oracle, Access)
   மேலதிக தகைமைகளும் கருத்திற்கொள்ளப்படும்.
5. **Multimedia Designers** - (Flash, Photo Shop, Coreldraw, Director)
6. **Office Assistant** - (ஆரம்பக் கணனி அறிவு உள்ளவர்கள்)

*நேர்முகப்பரீட்சை 12, 13, 14 - பெப்ரவரி - 2004
இல காலை 9 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை
நிலவு **.COM,** யாழ். வீதி, மானிப்பாய்
என்ற முகவரியில் நடைபெறும்.

(C/33235)(12-14-18-32)

# ஆசிரிய வாண்மை விருத்திக்கு தொடருறு கல்வி உதவுகிறது

## உதவிப் பணிப்பாளர்நாயகம் தெரிவிப்பு

வலி.தெற்கு,பெப்.12

ஆசிரிய கல்விச்செல்நெறிகளில் தொடருறு கல்வியே ஆசிரிய வாண்மையை விருத்தியாக்குகின்றது.

தேசியக் கல்வி நிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கினிக்கே இவ்வாறு குறிப்பிட்டார். தொடருறு ஆசிரியர் கல்விச்செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் ஆசிரிய மத்திய நிலையங்கள் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றில் பயின்றவர்களுக்கான இந்த தொடருறு ஆசிரியர் கல்விச்செயலமர்வு கடந்தமாதம் 31 ஆம் திகதியும் பெப்ரவரி மாதம்முதலாம் திகதியும் மகரகம தேசியக்கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வின்போது ஆசிரியர்களுக்கான பல்பரிமானத்தொடருறு ஆசிரியர் கல்விச் செயற்றிட்டங்கள், 2004 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் என்பன வடிவமைக்கப்பட்டன.

இச் செயலமர்வினைத் தேசிய கல்வி நிறுவக உதவிப்பணிப்பாளர் நாயகம் கினிக்கே ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்.

நவீன ஆசிரிய கல்விச்செல்நெறிகளில் தொடருறு கல்வியே ஆசிரிய வாண்மையை பல மடங்கு விருத்தியாக்குகின்றது. இக்கல்வியை வழங்கும் ஆசிரிய கல்வியியலாளர்கள் மிகுந்த ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று கினிக்கே தமது உரையில் குறிப்பிட்டார்.

ஆசிரிய கல்வியியலாளர்களாக இணைக்கப்பட்டுச் சேவையாற்றும் தகுதியுள்ளவர்கள் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவைக்குள் நிரந்தரமாக உள்வாங்கப்படுவர் எனவும்-

ஆசிரியர்களின் பயிற்சித் தேவைகளைக் கருத்திற் கொண்டு தொடருறு ஆசிரிய பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் கினிக்கே மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான செயல்நிலை ஆய்வுகளும் தேவையாக உள்ளன. ஆசிரியப்பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு மூன்று வருடங்களின் பின் சர்வதேச தரத்திலான மீள் பயிற்சியை தொடர்ச்சியாக வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

(ஒ-152)

### கூட்டங்கள் ஒத்திவைப்பு

கோப்பாய்,பெப்.12

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமும், விவசாயக் குழுக கூட்டமும் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுமென உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

(எ-72)

### விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி,பெப்.12

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் த.கந்தையா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார்.

(ஒ-117)

### சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

சாவகச்சேரி,பெப்.12

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு சர்வசாதனா சங்க சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஐ-10-31)

### மாணவர் ஒன்றுகூடல்கள்

வலி.தெற்கு,பெப்.12

அளவெட்டி அருணோதயக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்துகொள்ளவுள்ளார்.

(ஐ-10-152)

★ ★ ★

கைதடி,பெப்.12

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் என்.ஞானகுமாரனும் சிறப்புவிருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் பு.ஆறுமுகநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-10-75)

## மலிவு விற்பனை

குறோட்டன், முசந்தாஸ், Y.T.T,
மஞ்சல் கொடிப்பூ, ஈரப்பலா,
சைப்பிரஸ், குயின்பாம், பான்பாம்,
ஆவுஸ்ரேலியன்பாம், யூக்கோபியா,
ஒறக்கேரியா ஆகிய கன்றுகள்
மலிவு விலையில்
விற்பனைக்கு உண்டு.

**கிறீன்பாக்,**
152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
TP.:222 6563

(28386)(17)

## கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14.03.2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலையில் நடைபெற இருக்கிறது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம். பிரேரணைகள் அனுப்ப இருப்போர் 21.02.2004 இற்கு முன்னதாக செயலாளருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

த.பகீரதராஜ் (செயலாளர்)
கொக்குவில் இ.ஆ.பா.ப.மா.ச,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

*11.02.2004.* (28385)(32-14-18)

## கேள்வி அறிவித்தல்

### சாவகச்சேரி பிரதேச சபை
### திகதி மாற்றம்

23.01.2004 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் 14 ஆம் பக்கத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளவாறு கேள்வி திறக்கும் திகதி 16.02.2004 தவிர்க்க முடியாத காரணத்தினால் 17.02.2004 காலை 10.00 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

*சாவகச்சேரி பிரதேச சபை,*
*கொடிகாமம்.*
*11.02.2004.* (C/33236) (40-14-18-32)

ந.பாலசந்திரன்
செயலாளர்.

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



### அமரர் இரவீந்திரன் சுரேஸ்குமார்

(21ஆம் அணி மாணவன், மருத்துவ பீடம்)

ஆண்டுகள் நான்கு மறைந்தாலும் ஆறவில்லை எம்மிதயம்
மீண்டு ஒருமுறை வருவீரோ என ஏங்குகின்றோம்
மாண்டு நீர் போனதால் மனமுடைந்து போய்விட்டோம்
ஈண்டு உம்மை நினைந்தே இப்புவுலகில் வாழ்கின்றோம்.

21 ஆம் அணி
**மருத்துவபீடம்.**

*பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.* (28381)(24-14-18-32)

## மரண அறிவித்தல்

### திருமதி N.T.செல்லத்துரை கனகம்மா

மணிக்கூண்டு வீதியைப் பிறப்பிடமாகவும் 5ஆம் இலக்கம், யாழ். வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கனகம்மா அவர்கள் நேற்று (11.02.2004) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நா.த.செல்லத்துரை (முன்னாள் யாழ்.மாநகர உதவி முதல்வர், நீண்டகால மாநகரசபை உறுப்பினர், கூட்டணிக்கட்சியின முன்னாள் மத்திய குழு உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - கண்மணியின் அன்பு மூத்த மகளும் நேசம்மா, பூமணி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, விஜயரட்ணம், சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆறுமுகம் (பிரான்ஸ்), அன்னபூரணம், புஸ்பராணி, காலஞ்சென்ற தம்பிமுத்து, திரவியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகாலிங்கம் (நூலகர், வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி), ஸ்ரீதேவராசலிங்கம் (உரிமையாளர், ஸ்ரீசெல்வா மினி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பமலர், ஸ்ரீசுயானி ஆகியோரின் அன்பு மாமியாரும் உஷாந்தினி, மேனகா, செந்தூரன், மயூரன், நிஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பொன்னுத்துரை - புஸ்பராணி, முத்துலிங்கம் - தேவமலர் (உரிமையாளர், ஸ்ரீதேவி அரிசி ஆலை, அச்சுவேலி, ஸ்ரீதேவி தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்கள்- செ.மகாலிங்கம்,
செ.ஸ்ரீதேவராசலிங்கம்.

*"செல்வமாளிகை"*
*இல.5,யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (28391)(37-14-18-32)

# யாழ். மாநகர சபையில் முக்கிய பதவிகள் பதில் பதவி நிலைகளாகவே உள்ளன

## வாசகரின் கடிதத்திற்கு விளக்கம்

**15**-12-2003 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 07ஆம் பக்கத்தில் வாசகர் திருமுகம் பகுதியில் "உள்ளூராட்சி ஊழியர்களின் இடமாற்றம் மறுபேச்சின்றி அமுலாக வேண்டியதே" என்ற தலைப்பிலும் 28.12.2003ஆம் திகதிய பதிப்பில் "முதுமையும் நோயுமுள்ளோர் சேவை நீடிப்புக்கு விண்ணப்பிப்பதேன்?" என்ற தலைப்பிலும் அரியாலையூரரது எண்ணங்கள், கற்பனைகள் மற்றும் கேள்விகளுக்கு பகிரங்கமாக விடையளிக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு எனக்கு இருப்பதனால், வாசகர் திருமுகம் பகுதியூடாக அவர் திருப்திப்படும் வகையில் உண்மைகளை துலாம்பரமாக விளக்க முற்படுகின்றேன்.

### ஆரோக்கியமான விமர்சனம்

உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பாக யாழ். மாநகரசபையில் உள்ள இருவேறு பதவி நிலைகளைப்பற்றி மிகத்தெளிவாக வரியிறுப்பாளர் ஒருவர் அறிந்திருப்பது, ஏனையவர்களுக்கு அதனைத் தெளிவுபடுத்தியிருப்பது உண்மையில் ஓர் ஆரோக்கியமான விடயமாகும். ஆனால், தமது கட்டுரையில் மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 900 எனக்குறிப்பிட்டிருப்பது கடந்த கால எண்ணிக்கையாகும். தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை 1,188 ஆகும். இதில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகள் 227ம், அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள் 961 ஆகமொத்தம் 1,188 ஆகவே உள்ளது. மேலும் இடமாற்றம் வழங்கியது மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரே அன்றி மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவல்ல. அட்டவணைப்படுத்தப்படாத பதவியினர் நியமனம் பெற்ற திகதியிலிருந்து ஓய்வுபெறும் வரை இடமாற்றம் ஏதுமின்றி தொடர்ந்தும் யாழ். மாநகர சபையில் பணியாற்றுகின்றனர் என்ற கூற்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும் ஒரு சிலர் தமது முயற்சியினால் இடமாற்றம் பெற்றுச்சென்ற சம்பவங்களும் மாநகர சபையில் இருக்கத்தான் செய்கிறன.

அட்டவணைப்படுத்தப்பட்ட பதவியினர் எவரேனும் தமது முதல் நியமனத் திகதியிலிருந்து இளைப்பாறும் வரை தொடர்ச்சியாக யாழ். மாநகரசபையில் பணியாற்றியதாக வரலாறு இல்லை. அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்குரிய நிர்வாக ரீதியிலான பதவி வகிப்போர் நீண்டகாலம் பதவியிலிருப்பின் ஊழியர்களை அடக்கியோ, அழுத்தியோ, தமக்கிசைவாக மாற்றி லஞ்சம் ஊழல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகுமெனக் கட்டுரையாளர் கற்பனை செய்துள்ளமையை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சம்பந்தப்பட்ட இருபிரிவினரையும் இடமாற்றம் செய்யவேண்டுமென்றதொரு பொதுவான கோரிக்கையை முன்வைத்திருந்தால் அதனை நடுநிலையாளர்கள் வரவேற்றிருப்பர்.

நாடும், நகரமும், மக்களும் முன்னேற்றகரமான பாதையில் காலடிவைத்து கல்வியறிவில் மேம்பட்டு நவீன யுகத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கையில் ஒருசாரார் தமக்குக்கீழுள்ளவர்களை அடக்கவோ, அழுத்தவோ, தமக்கிசைவாக மாற்றவோ முடியாது. கட்டுரையாளர் 'ஆண்டான் அடிமை' என்ற நிலையிலேயே நின்று மாநகர சபையைப்பார்க்கின்றார் போலும். கடைசியாகப் பதவி வகித்த சபையின் ஆட்சியின் போதும், அதற்கு முன்பிருந்த நிர்வாக காலத்திலும் தொழிலாளர் தரத்திலிருந்தோருக்கு மேற்பார்வையாளர், அலுவலகத் தொழிலாளர் போன்ற பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் வெளிக்கள வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பலர் அலுவலகங்களுக்குள் பணியாற்றும் வாய்ப்புக்களும் ஏற்படலாயிற்று.

### அடக்குமுறை கிடையாது

மாநகரசபையின் சகல தரங்களையும் சேர்ந்தோரை அங்கத்தவர்களாகக் கொண்டியங்கும் யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் மிக நீண்டகாலமாக கட்டுரையாளர் கூறியதுபோல நிர்வாக அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்கிவந்துள்ளது. ஆனால், தற்போது அச்சங்கத்தை நிர்வகிப்போர் அனைவரும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளிலுள்ளோரே என்பது பெருமைக்குரியதொரு விடயமாகும். மாநகர சபையைப் பொறுத்தவரையில் கட்டுரையாளர் கற்பனை செய்வது போன்றதொரு நிலைமை ஒரு தசாப்தத்திற்கு முன்னதாகவே மலையேறிவிட்டது. அவர் இதை அறியாதிருப்பது விந்தையாகவே உள்ளது.

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் நியமனம் பெற்றுப் பணியாற்றிய பலர் காலப்போக்கில் போட்டிப்பரீட்சைகளில் சித்திபெற்று அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளில் சேர்ந்து மேல் நிலையை எய்திய சம்பவங்களும் உள்ளூராட்சி மன்றங்களில் சிறப்பாக மாநகரசபையில் இடம்பெற்றுள்ளன. இவற்றிலிருந்து மேல்நிலையிலுள்ளோர் தமக்குக் கீழுள்ளோரை அடக்கவோ, அழுத்தவோ தமக்கிசைவாக மாற்றவோ இல்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வருடாவருடம் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறானதொருசர்ச்சை ஏற்பட வாய்ப்புக் கிடைத்திருக்காது. இது யாருடைய தவறு? மாநகரசபையைப் பொறுத்தவரை இடமாற்றக் கட்டளையைப் பெற்றவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் அனைவரும் தமது இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படிகோரி மேன்முறையீடு செய்யவில்லை. மாறாக தமக்கு வழங்கப்பட்ட புதிய இடத்திற்குப் பதிலாக கிட்டிய இடங்களுக்கு இடமாற்றம் வழங்கும்படியே கோரியிருந்தார்கள் என்பதே உண்மையான நிலைப்பாடாகும். உத்தியோகத்தர்கள சோம்பல் முறிக்கும் நிர்வாகக் கட்டமைப்பு எதுவும் மாநகரசபையில் இல்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது. சோம்பல் முறிப்பவர்கள் எவ்வாறு சம்பள ஏற்றங்களையும், பதவி உயர்வுகளையும் பெறமுடியும்? மக்கள் சேவையில் ஈடுபடும் அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எவரும் சோம்பியிருக்க பொதுமக்களோ அன்றி வரியிறுப்பாளர்களோ அனுமதிக்கமாட்டார்கள்.

நிர்வாக அதிகாரிகளின் கீழ் பணியாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத வகுதியைச் சேர்ந்த பணியாளர்களை அடக்கி ஒடுக்க அவர்கள் நலனில் அக்கறையுள்ள தொழிற்சங்கம் எவ்வாறு அனுமதிக்கும்? மனித உரிமைகளைப் பாதுகாக்க மனித உரிமை ஆணைக்குழு இயங்கும் இக்காலத்தில் எவ்வாறு அடிப்படை மனித உரிமைகளை மேலதிகாரிகள் மீறவோ அன்றி பறிக்கவோ முடியும்? எடுத்துக்காட்டாக பின்வரும் நிகழ்வைக் குறிப்பிடலாம் - அட்டவணைப்படுத்தப்பட்ட பதவியிலுள்ளோர் கொண்டுள்ள கல்வித் தகைமைகளையொத்ததகைமைகளை அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளிலுள்ளோர் கொண்டிருந்தபோதிலும் இரு பிரிவினரினதும் சம்பள விகிதத்தில் பாரிய வேறுபாடு தற்போதும் உள்ளது. இந்நிலைமையை மாற்றியமைத்து சமமான சம்பளம் வழங்கப்படல் வேண்டுமென திஸ்ஸ தெய்வேந்திரா தலைமையிலான சம்பள மீளாய்வுக்குழுவுக்கு மாநகர சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்வதற்கு உந்து சக்தியாக நிர்வாக அதிகாரிகளே விளங்கியுள்ளனர்.

### மாநகரசபை வயோதிபர் மடம் அல்ல

இளைப்பாறவேண்டிய வயதினையடையும் ஓர் உத்தியோகத்தர் தொடர்ந்தும் சேவையாற்றக்கூடிய உடலாரோக்கியத்தைக் கொண்டிருப்பின் அவர் சேவை நீடிப்புக்கோரி விண்ணப்பிக்க முடியும். அதனை ஆணையாளரும் சிபார்சு செய்வார். எப்போது ஒருவர் நோயாளியாவாரென எவராலும் ஆருடம் கூற முடியாது. மிக இளவயதிலேயே நோயாளியானவர்களும் மாநகர சபையில் கடமையாற்றத்தான் செய்கிறார்கள். சேவை நீடிப்பு பெற்ற பின்னர் நோய்வந்தால் என்னசெய்வது? வருடாந்த இடமாற்றங்கள் ஒழுங்காக இடம்பெற்று வருமானால் சேவைநீடிப்பு பெறுவோர் இடமாற்றத்தில் செல்லநேரிடும் என எண்ணி சேவை நீடிப்புக் கோராது இளைப்பாறிச்செல்லவே விரும்புவர். வருடாவருடம் இடமாற்றம் செய்யப்படாதமைக்கு குறிப்பிட்ட மாநகர சபை உத்தியோகத்தர்கள் மீது குறைகூறுவதில் அர்த்தமில்லை. அரச உத்தியோகத்தர்கள் சேவைநீடிப்பின்றி கடமையாற்ற வேண்டிய கட்டாய வயது 55 ஆகும். எனினும் 57வயது வரை சேவைநீடிப்பு பெறாது கடமையாற்றமுடியும். அதன் பின்னர் 60வயதுவரை வருடாவருடம் சேவைநீடிப்புபெற்றே பணியாற்ற முடியும். மாநகரசபையைப் பொறுத்தவரையில் அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்த சில பதவியினர் 60 வயதின் பின்னரும் சேவையாற்றி வருகின்றார்கள். பிரதேசசெயலகம், சுகாதார சேவைகள் திணைக்களம் ஏன் மாகாணசபையிலும் அவ்வாறான தொரு நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, அவ்வாறான திணைக்களங்களை வயோதிபர் மடமென நாம் வர்ணிக்கலாமா? சேவைநீடிப்புப்பெற்ற ஓர் உத்தியோகத்திரின் செயற்பாடுகளில் குறையாடுகள் ஏதும் இருப்பின் அதனை மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்து தகுந்த பரிகாரத்தைக் காணுதல் வேண்டும். அதனைவிடுத்து தூரத்தில் நின்று கொண்டு மேலெழுந்த வாரியாக முதியோர் பணியாற்றுகின்ற நிறுவனங்கள் அனைத்தும் வயோதிபர் இல்லம் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தற்போதைய மாநகரசபை ஆணையாளர், செயலாளர் போன்ற பிரதான நிர்வாகிகள் வடமராட்சியில் இருந்தாலும் உரிய நேரத்திற்கு அலுவலகம் வரவேண்டிய கடப்பாடுடையவர்கள். அவர்கள் அதனைச் செய்வதாகக் கூறியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் யுத்தம் நிறுத்தப்பட்டது தவிர வடக்கு-கிழக்கு வாழ். மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு இன்னமும் திரும்பவில்லையென்பதே அனைவரதும் ஏகோபித்த கருத்தாகும். கடந்தகால யுத்தத்தினால் யாழ். மாநகரசபைக்கு ஏற்பட்ட இழப்புக்களைப்போல் வேறெந்த அரசு நிறுவனங்களுக்கும் ஏற்படவில்லை. குறிப்பாக யாழ்ப்பாண மாநகரசபையின் பழைய கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டது. 01.06.1981இல் பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டது. அங்கிருந்த தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் விலைமதிக்க முடியாத 97,000 நூல்களும் சாம்பலாகின. நூலகக் கட்டடத்தினை மீளக்கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை உருவாகும் வரை பொறுத்து இருக்காது மக்களின் அறிவுப்பசியைத் தீர்ப்பதற்காக 1986ஆம் ஆண்டு முதல் கிளை நூலகங்கள் செயற்பட ஆரம்பித்தன. எரியூட்டப்பட்ட நூலகத்தைப் புனரமைத்து முன்பிருந்த நிலைக்கு மேலாக மீள்விப்பதற்கு அரசு 120 கோடி ரூபாவரை வழங்கியுள்ளது. நூலகக் கட்டடத்தை மீளமைப்பதற்கு துரைராஜா அசோசியேட்ஸ் நிறுவனம் இலவசமாக கட்டட புனரமைப்பு ஆலோசனையை வழங்கியிருப்பது ஒரு சிறப்பான அம்சமாகும். நூலகத்தைக் கணனி மயப்படுத்துவதற்காக யுனெஸ்கோ நிறுவனம் 200 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பீடுசெய்து 70 லட்சம் பெறுமதியான வேலைத்திட்டங்களை இதுவரை நிறைவேற்றி உள்ளது. மிகுதி வேலைகளையும் செய்வதில் அந்நிறுவனம் உற்சாகமாக ஈடுபட்டுள்ளது.

களஞ்சியக் கட்டடத்தில் அடிப்படை வசதிகளின்றி தற்போது நாம் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் எமது நலனிலும், சுக போகங்களிலும், வசதிகளிலும் பார்க்க மக்கள் சேவைக்கு முதலிடம் வழங்கி முக்கிய பல வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2003ஆம் ஆண்டில் மாத்திரம் மக்கள் நலனை முன்னிட்ட வேலைத்திட்டங்கள் மொத்தம் 57027900 ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

மாநகரசபையின் முன்னைய கட்டடத்தினை முன்பிருந்த இடத்தில் மீளவும் அமைப்பதற்காக 250 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டு நிதிவழங்கும் நிறுவனங்களிடம் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகர மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்கிவரும் நிறுவனமான மாநகரசபையை உதவி அரச அதிபர் பணிமனையுடனோ, பிரதேச சபையுடனோ அல்லது பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துடனோ, ஒப்பிடுதல் பொருத்தமற்றதாகும். அழிந்துபோன மாநகரசபையின் பழைய கட்டடத்தை ஒருகணம் எண்ணிப்பார்த்தால் வருமானப் பகுதி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பதிவகம், அரச கணக்காய்வாளர் பகுதி, கணக்குப்பகுதி, தாபனப் பகுதி, உள்ளகக்கணக்காய்வுப் பகுதி, காசாளர் பகுதி, தொலைபேசி இயக்குநர் பிரிவு, மாநகர முதல்வர், துணை முதல்வர் மற்றும் ஆணையாளரது அலுவலக அறைகள், சபை கூடும் மண்டபம், செயற்குழு அறை, நகரமண்டபம், சிற்றூண்டிச்சாலை, பொழுதுபோக்கு அறை போன்றன எம் கண்முன்னே தோன்றுகின்றன.

### மாநகரசபைக்குப் புதிய கட்டடம் வெகு விரைவில்.

இவையனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கட்டடத்தொகுதியுடன் எந்தவொரு அரச திணைக்களத்தின் கட்டடத்தையோ, மண்டபத்தையோ ஒப்பிடமுடியாது. முன்னர் இயங்கிய பிரிவுகளுடன் எதிர்கால முன்னேற்றம், நகர விரிவாக்கம், விரிவுபடுத்தப்பட வேண்டிய நிர்வாக அலகுகள், நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை போன்ற ஏனைய பலவற்றையும் உள்ளடக்கும் விதத்திலேயே புதிய மாநகரசபைக் கட்டடம் அமைக்கப்படல் வேண்டும். நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் மாநகரசபையின் புதிய கட்டடம் திறக்கப்படும் நாள் வெகுதூரத்தில் இருக்காது.

முக்கிய பதவிகள் பல பதில் பதவிநிலையில் இருப்பது உண்மைதான். இப்பதவிகளில் ஒரு சிலவற்றை மீள்நியமன அடிப்படையில் நியமிப்பதற்கு உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட போதிலும் தகுதியானவர்கள் எவரும் விண்ணப்பிக்கவில்லை. சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார தாதி, மருத்துவ மாதுக்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பொறியியலாளர்கள் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் இருப்பதால் அவற்றை நிரப்பும்படி பலமுறை மாகாணசபையைக் கோரியிருந்தும் நியமனம் எதுவும் இதுவரை செய்யப்படாமையினால் தற்போதும் அப்பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. இதன் காரணமாகவே அப்பதவிகள் யாவும் பதில் பதவி நிலையினராலேயே கவனிக்கப்பட்டு வருகின்றன. வெற்றிடமாகவுள்ள அனைத்துப் பதவிகளையும் விரைவாக நிரப்புமாறு மாகாண சபையைக் கோரியிருந்தும் இதுவரை வெற்றிடங்கள் எதுவும் நிரப்பப்படவில்லை. புதிய நியமனங்கள் எதையும் செய்யக் கூடாதென்ற கட்டுப்பாடு தற்போதும் அமுலில் இருப்பதே இதன் பிரதான காரணமாகும். மாநகரசபையைப் பொறுத்தவரையில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமனம் செய்யமுடியாத நிலை தற்போதும் தொடருவதனால் ஏற்கனவே நியமனம் பெற்றவர்களுக்கு பதவியுயர்வுகளை வழங்கி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.

2/92 ஆம் இலக்க 15.02.1992 ஆம் திகதிய பொதுநிர்வாகச் சுற்றறிக்கையில் அதிவிசேட தரத்தைச் சேர்ந்த தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் சேவைகளைச் சேர்ந்தவர்களுக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள கடமையான பொதுசனத் தொடர்பு அதிகாரி பதவி அதிவிசேட தரத்தைச் சேர்ந்த எனக்கு வழங்கப்பட்டதே தவிர அப்பதவி பதில் பதவி நியமனம் அல்ல என்பதை அனைவரும் அறிவர். இதனை கட்டுரையாளர் அறியாதிருப்பின் இப்போது அறிந்துகொள்ளலாம்.

மாநகரசபையின் வரியிறுப்பாளர், வாக்காளன் மற்றும் ஊழியன் என்ற ரீதியில் நான் நிறுவனப்பற்றுடன் பணியாற்றுவது இயல்பானதே. அந்தவகையில் மேற்படி எனது முழுமையான விளக்கம் இச்சர்ச்சைக்கு முற்றுப்புள்ளியிடுமென நம்புகின்றேன்.

இ.இரத்தினசிங்கம்
பொதுசனத் தொடர்பு அதிகாரி
யாழ். மாநகரசபை

அல்வாய் பாரதிதாசன் நூலகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட போரூட் நிறுவனத்தின் யாழ். திட்ட அலுவலர் நா.கோகுலதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் நூலகத் தலைவர் கி.நடராசா, செயலாளர் ம.கனகரத்தினம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



## வாழ்த்துகின்றோம்

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்." - (குறள்)

தந்தை காட்டிய பாதையில் தனது தனயன்

**சிவஸ்ரீ சு. ஸ்ரீரங்கநாதனுக்கு**

இன்று ஆசாரிய அபிஷேகம் செய்து மகிழும்

**சிவஸ்ரீ சு.சுந்தரராசக்குருக்கள்**

குடும்பத்தினருடன் நாமும் சேர்ந்து மகிழ்கின்றோம்; வாழ்த்துகின்றோம்.

வழக்கம்பரை,
சுழிபுரம். (C/33202) (26-18-14-31) **"பஜனைச் சபையார்"**



உ

உரும்பிராய்
கருணாகரப் பிள்ளையார் கோயில்

## மணவாளக் கோல விழா

*விநாயக அடியார்களே!*

இன்று (12.02.2004) வியாழக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு
1008 சங்குகளால் அபிஷேகம் ஆரம்பமாகும்.
நண்பகல் மாகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும்.

**பிற்பகல் நிகழ்ச்சிகள்**

மாலை 5மணி - விசேடபூசை
5.30 மணி உபந்நியாசம் (விநாயகர் பரத்துவம் - மூவர்தமிழ்)

நிகழ்த்துபவர்:
*சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்* **சி.நந்தகுமார்** அவர்கள்

**பண்ணிசைக் கச்சேரி**

*தேவார இசைமணி, கலாபூஷணம்*
தாவடியூர் **எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்** அவர்கள்
வசந்தமண்டபப் பூசை, திருவூஞ்சல்

இரவு பூந்தண்டிகையில் கருணாகரப்பிள்ளையார் திருவீதி எழுந்தருளுவார்.
அடியார்கள் அனைவரும் அருள்பெற அழைக்கப்படுகின்றனர்.

கருணாகரப்பிள்ளையார் கோயில்,
உரும்பிராய். **- திருப்பணிச் சபையினர்.**

(28325)(26-18-14-31)

## உடுவிலில் எரிபொருள் விற்பனை நிலையம்

அரியாலை,பெப்.12

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடுவில் பகுதியில் புதிதாக நவீன வசதிகளைக் கொண்ட எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றை அமைத்து வருகின்றது.

சுமார் 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த எரிபொருள் விற்பனை நிலையம் விரைவில் திறந்து வைக்கப்படும் என்று சங்கத் தலைவர் சி.குமாரவேல் தெரிவித்தார்.

மண் எண்ணெய், டீசல், பெற்றோல் ஆகிய எரிபொருள்கள் இந்த விற்பனை நிலையம் ஊடாக பாவணையாளர்களுக்கு வழங்கப்படும்.(ஜ-17)

## பெற்றோல் எடுத்துச்சென்றவர் நீதிமன்றில் ஆஜர்

தென்மராட்சி,பெப்.12

பருத்தித்துறையிலிருந்து தாளையடி ஊடாக புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பஸ்ஸில் அனுமதிப் பத்திரமின்றி 72 லீற்றர் பெற்றோல் கொண்டு சென்ற நபர் முகமாலை சோதனைச் சாவடியில் தடுத்துவைக்கப்பட்டார்.

இந்த நபரை நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர். அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்து வழக்கினை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (ஜ-117)

# சுன்னாகம் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை தெரிவு

அரியாலை,பெப்.12

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் சி.குமாரவேல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கூட்டுறவுப் பரிசோதகர் செ.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் புதிய இயக்குநர் சபை தெரிவுக் கூட்டத்தில் இயக்குநர்கள் ஏழுபேரும் மீண்டும் போட்டியின்றியே தெரிவானார்கள்.

சி.குமாரவேல் தலைவராகவும் சு.செல்லப்பா உபதலைவராகவும் மற்றும் இயக்குநர்களாக செ. இலகுநாதன், இ.பரமேஸ்வரலிங்கம், ந.வயிரவநாதன், சு.சுதாகர், செல்வி பா. பாலகௌரி ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவானார்கள். (ஜ-17)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



*அமரர் சதாசிவம் கார்த்திகேசு*

முத்து வைரவர் பாதம் சேர்ந்து
முத்தி அடைந்த ஐயா!
பக்தியோடு நீங்கள் செய்த சேவை
இங்கு எங்களுக்கு
பத்தாண்டாய் பாதை வழிகாட்டுதய்யா
நித்தம் மலர்சாத்தி நினைந்து வணங்குகிறோம்!

*9/12, திருமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* - குடும்பத்தினர்.

(28343)(31-14-16)

# வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்

(நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**
**கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்)**

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ.) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இனமுரண்பாட்டினால் மக்களின், குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கும், மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு, விடுவிக்கப்பட்ட விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்தச் சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப கட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்று படுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|
| முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | குரவில் |
| முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | ஒதியமலை |
| முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | பெரியகுளம் |
| முல்லைத்தீவு | துணுக்காய் | நமனன்குளம் |
| முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | செம்மலை/செம்மலை மேற்கு |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விவரங்களை *வேலைநாள்களில் காலை 9.30மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (முல்லைத்தீவு மாவட்டம், தொலைபேசி 024-222 2402, தொலைநகரி 024-222 0592)* பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்தவிரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு / அரசாங்க அதிபருக்கு 05-03-2004 மாலை 3.00மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத்தெரிவு வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

விருப்பத்தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தும் வேலைத்தொகையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விவரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(C/33191)(26-14-16-31)


## G.A.Q., 1st IN Com.

(பேராதனை, யாழ். பல்கலைக்கழகம் வெளிவாரி)

**புதிய பிரிவு ஆரம்பம்: 14-02-2004**

*குறிப்பு:* பேராதனை பல்கலைக்கழகம் இதற்குரிய பதிவிற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும். விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

*விவரங்களுக்கு:*

**S.அருள்நங்கை,**
**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்.

(28333)(26-14-16-31)

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சந்திரச் சந்திக்கு அண்மையில்)
தொ.பே.இல.: 222 - 2567

(சி-33075) (16-14-31)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 01 - 1931



உதிர்வு 24 - 01 - 2003

**அமரர் கந்தையா சோமசேகரம்**

(கோண்டாவில்) திதி: 12.02.2004

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
குடும்பத்தின் அகல்விளக்காய் எமக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும்
எங்கள் இதயங்களில் அணையாத விளக்காக ஒளி வீசுவீர்கள்!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*
*என்றும் உங்களின் ஆசிவேண்டி நித்தமும் உங்களின் நினைவோடு வாழ்ந்திடும்*
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

(28287)(35-14-16-31)

தகவல்:
யோ.தர்ஷிகா (பேர்த்தி).

# இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு பாகிஸ்தானில் உச்சப் பாதுகாப்பு!

பதின்னான்கு ஆண்டுகளுக்குப் பின னர் பாகிஸ்தானுக்கு வரும் இந்தியக கிரிக்கெட் அணிக்கு மிக உச்சப் பாது காப்பு அளிக்கப்படும்.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரட் இவ்வாறு உறுதியளித்திருக் கிறார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷாரியார் கான் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியா-பாகிஸ்தான் உறவுகள் சீர்கெட்டிருந்த காரணத்தால் இரண்டு நாட்டு அணிகளுக்குமிடையேயான கிரிக்கெட் உறவுகளும் தொடர்புகளும் கூட பாதிப்புற்றிருந்தன.

இருதரப்பு உறவுகள் இன்னும குறிப்பிடத்தக்க அளவுக்கு சீரடையாத நிலையில் 14 ஆண்டுகளின் பின்னர் அடுத்த மாதத்தில் முதல் தடவை யாக இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் செல்வதற்கு ஆயத்தங்கள செய்யப்படுகின்றன.

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்கு தல்களால் பதற்றம் நீடிக்கும் இச்சம யத்தில், இந்தியக் கிரிக்கெட் வீரர்கள பாகிஸ்தான் செல்வது அவர்களுக்கு ஆபத்தாகலாம் என்ற செய்திகள் இந்தி யாவில் வெளியாகி வருகின்றன.

அத்தோடு, இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் மோதல்கள் இருதரப்பு ரசிகர்களிடையேயும் கூட குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியவை. இந்தப் பின்னணியில் பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் மத்தியில் கிரிக்கெட் ஆட்டம் நடக்கும்போது ஏற்படக்கூடிய சிறிய குழப்பமும் பெரும் விபரீதமாகி விட லாம எனச்சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நிலையில்தான் பாகிஸ் தானில கிரிக்கெட் சுற்றுலா மேற்கொள் ளும் இந்திய வீரர்களின் பாதுகாப் புக்குறித்து இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் கங்குலி சில சந்தேகங்களைக் கிளப்பியிருந்தார்.

அவைகுறித்து பதிலளித்த சமயமே, இந்திய வீரர்களுக்கு உச்சப்பாது காப்பு அளிக்கப்படும் என்ற உறுதிமொழி யைப் பாகிஸ்தான் ஜனாதிபதி வழங்கியி ருக்கின்றார் என்ற தகவலை அந்நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் வெளியிட்டிருக்கின்றார். (8)

# ஸிம்பாப்வே சுற்றுலாவை ரத்துச்செய்யக் கோரிக்கை

எதிர்வரும் ஒக்ரோபரில் ஸிம்பாப் வேய்க்கு மேற்கொள்ளவிருக்கும் இங்கி லாந்து அணியின் கிரிக்கெட் சுற்று லாவைக் கைவிடுமாறு இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அலெக்ஸ்டுவேர்ட் கோரியிருக்கிறார்.

அடுத்த மாதம் (மார்ச்சில்) சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. அது வரை இந்த விடயத்தில் ஒரு முடிவு எடுப் பதை இங்கிலாந்து நிறுத்தி வைத் திருக்கின்றது.

ஸிம்பாப்வே, ஜனாதிபதி றொபேர்ட முகாபேயின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந் நாட்டுக்கான கிறிக்கெட் சுற்றுலாவை ரத்துச் செய்யும்படி இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபைக்கு இங்கிலாந்து அரசு ஆலோசனை வழங்கியிருக்கின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற உலகக கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யின் போது ஸிம்பாப்வேயுடன் அந்த நாட்டின் தலைநகர் ஹராரேயில் நடை பெற வேண்டிய ஓர் ஆட்டத்தில் பங்கு பற்றாமல் இங்கிலாந்து பகிஷ்கரித் திருந்தது தெரிந்ததே.

கடந்த ஒரு வருடத்தில் ஸிம்பாப் வேயில் எந்த மாற்றமும் ஏற்பட வில்லை. அப்படியிருக்க தனது நிலைப்பாட்டில் இங்கிலாந்து இந்த ஒரு வருட காலத்துக்குள் எப்படி மாற முடியும்? - என்று கேள்வி எழுப்பு கிறார் அலெக்ஸ்ருவேட்.

# தென்னாபிரிக்கா – நியூஸிலாந்து முதல் ஒரு நாள் ஆட்டம் நாளை

ஹமில்டன்,பெப்.12

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்று லாவை மேற்கொண்டிருக்கும் தென் னாபிரிக்கா அணி நாளை ஒக்லண்டில் நியூஸிலாந்து அணியுடன் முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் மோதவிருக் கின்றது.தென்னாபிரிக்க அணி நேற்று ஹமில்டனில் பலம்மிக்க நியூஸி லாந்தின் வடக்கு மாவட்ட அணியுடன் நடைபெற்ற ஒரு நாள் ஆட்டத்தில் மிகச் சுலபமாக ஈட்டிய வெற்றியுடன் தனது நியூஸிலாந்துச் சுற்றுலாவை ஆரம்பித்திருக்கின்றது.

நியூஸிலாந்து வடக்கு மாவட்ட அணியை 42.3 ஓவர்களில் 114 ஓட்டங் களில் ஆட்டமிழக்கச் செய்த தென்னா பிரிக்கா, அந்த ஓட்ட எண்ணிக்கையை இருபதுக்கும் குறைந்த ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்குப் பெற்று, ஆறு விக்கெட்டுக்களினால் ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

தென்னாபிரிக்க அணி நியூஸி லாந்தில் ஆறு ஒரு நாள் ஆட்டங்களி லும் மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரிலும் பங்குபற்றவிருக் கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல்கள்

வலி.வடக்கு,பெப்.12

யாழ்ப்பாணம் பிரதேச செயலா ளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே யான கலந்துரையாடல் யாழ்ப்பா ணப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ் பிரதேச செயலர் பா.செந் தில்நந்தனன் தலைமையில் இன்று பிற் பகல 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாண்டுக்கான விளையாட் டுப்போட்டியை நடத்துதல், விளையாட் டுத்துறையின் வளர்ச்சிக்கான செயற் பாடுகள் சம்பந்தமாக முக்கியமாக கலந்துரையாடப்படவுள்ளன. பதிவு செய்யப்பட்ட கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது இதில் கலந்துகொள்ளும்படி விளையாட்டு உத்தியோகத்தா செ.ரமணன் கேட்டுள் ளார். (ஒ-86)

★ ★ ★

கோப்பாய் பிரதேசச் செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கான கலந்துரை யாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற உள்ளது.

இவ்வாண்டுக்கான தடகள விளை யாட்டுப்போட்டி சம்பந்தமான விடயங் கள் ஆராயப்படவுள்ளதனால் விளை யாட்டுக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை இதில் தவறாது கலந்துகொள்ளும்படி விளையாட்டு உத்தியோகத்தர் பா.பாஸ்கரன் கேட் டுள்ளார். (ஒ-86)

# பாக்.பந்துவீச்சாளர்களுக்குப் பழக்க இம்ரானுக்கும் அக்ரமுக்கும் அழைப்பு

## அணித் தலைவர் இன்ஸமாம் விடுக்கிறார்

"இந்தியாவுக்கு எதிரான கிரிக் கெட் போட்டிகள் ஆரம்பமாக முன்னா பாகிஸ்தானின் இளம் வேகப்பந்து வீச்சாளருக்கு ஊக்கமளிக்கும் வகை யில் முன்னாள் வேகப்பந்து வீச்சாளா களான இம்ரான்கானும், வஸிம் அக்ரமும் தாமாக முன்வந்து அவர்க ளுக்கு விசேட பயிற்சிகளை அளிக்க வேண்டும்"

-இவ்வாறு அழைப்பு விடுத்திருக் கின்றார் பாகிஸ்தானின் அணித் தலை வா இன்ஸமாம்-உல்-ஹக்.

"பயிற்சி முகாமுக்கு சமுகந்தந்து எமது பந்து வீச்சாளர்களுக்கு சில விசேட வகுப்புக்களை எடுக்கும்படி அவர்களை நான் கோருகிறேன். இதன் மூலம் எமது வீரர்கள் நிறை யப்படித்துக்கொள்ளலாம்.

"சொய்ப் அக்தர், முஹமட்சமி, ஷபீர் அஹமட், உமர் குல் போன்ற வேகப பந்து வீச்சாளர்கள் இந்த இரண்டு முன்னாள் வீரர்களினதும் பரந்த அனுப வங்களில் இருந்து பலவற்றை அறிந்து கொள்ளமுடியும்.

"இந்தியாவுக்கு எதிரான வெற்றி கரமான கிரிக்கெட் சுற்றுலாவுக்கு இம்ரானும், வஸிமும் தலைமை தாங்கியிருக்கிறார்கள். இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிரான பயனுள்ள- தாக்கமுள்ள- வகையில் பநது வீசுவது எப்படி என்பது குறித்து நன்கு அறிந்து வைத்துள்ள அவர்கள் இருவரும் சிறப்பான ஆலோசனை களைத் தரமுடியும்" என்றார் இன்ஸமாம்.

பாகிஸ்தானில் இடம்பெறவிருக் கும் இந்தியக் கிரிக்கெட் சுற்றுலாவை யொட்டி பாகிஸ்தான் வீரர்களைத் தயார்ப்படுத்தும் பயிற்சி முகாம் எதிர் வரும் 24 ஆம் திகதி லாகூரில் ஆரம்ப மாகின்றது. இந்தப் பயிற்சி முகாமில் பந்து வீச்சு மற்றும் பந்துத்தடுப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தப் படும் என்றார் இன்ஸமாம்.

"எங்களது பந்துத்தடுப்பு முறையும் பந்துவீச்சாளர்களின் போக்கும் அதி களவு 'நோ - போல்', 'வைட் - போல்' மற்றும் உதிரிகள் போன்றவற்றை எதிர தரப்புக்கு விட்டுக்கொடுக்கச் செய்கின்றன. அவற்றைத் தவிர்த்துப் பார்த்தல் மிகக் கடுமையான ஒரு போட்டித் தொடருக்கு நாம் தயாராக உள்ளோம்" என்றார் அவர்.

"என்னைப் பொறுத்தவரை பாகிஸ் தானில் இந்திய வீரர்களுக்குப் பாது காப்புப் பிரச்சினைகள் இல்லை என்பதில் நான் நூறு வீதம் உறுதியாக உள்ளேன். அவர்களுக்குப் பாகிஸ்தானில் முழுப் பாதுகாப்பு உண்டு. அவர்களின் பாது காப்பையும் பந்தோபஸ்தையும் முழு அளவில் உறுதிப்படுத்தக் கூடிய முழுத தகுதி நிலையில் நமது கிரிக்கெட் சபையும அரசும் உள்ளன" என்றார் அவர்.

# விளையாட்டு

# திருமறைக் கலாமன்றத்தின் 'காவியநாயகன்' ஆற்றுகை!

## நவீன தொழில்நுட்பத்துடன் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.திருமறைக் கலாமன்றத்தி னால் தவக்காலத்தில் மேடையேற்றப் பட்டுவரும் இயேசுவின் திருப்பாடு களின் காட்சி, இம்முறை நவீன தொழில் நுட்ப உத்திகளுடன் மிகப் பிரமாண்டமான அளவில் தயாரிக் கப்படவுள்ளது.

'காவியநாயகன்' என்ற பெயரில் மார்ச் மாதம் 31 ஆம் திகதி, ஏப்ரல் முதலாம், 3 ஆம், 4 ஆம் திகதி ஆகிய நான்கு நாள்களும் இக்காட்சி மேடையேற்றப்படவுள்ளது.

இதற்கான பிரதி வழங்கும் வைப வம் எதிர்வரும் 25 ஆம் திகதி வீபூதிப் புதனன்று மாலை 4.30 மணிக்கு மன்ற அரங்கில் நடை பெறவுள்ளது.

250 இற்கும் அதிகமான கலை ஞர்கள் இப்படைப்பில் பங்கேற்க வுள்ளனர். இந்நிகழ்வில் கலைஞர் களாகத் தம்மை இணைத்துக் கொள்ள விரும்புபவர்களை பிரதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மன்றம் கேட்டுள்ளது.

'காவியநாயகன்' என்ற திருப் பாடுகளின் காட்சி, கடந்த 2001 ஆம ஆண்டும் மன்றத்தினால் மேடை யேற்றப்பட்டிருந்தது. இப்படைப்பு, திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருள்திரு. நீ.மரியசேவியர் அடிக ளாரின் எழுத்துருவாக்கம் ஆகும். (எ-9)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி.பெப்.12

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ஒ-173)


## தவறிவிட்டது

சென்ற செவ்வாய்க்கிழமை (10.02.2004) காலை 10 மணிமுதல் 11 மணிக்கு இடையில் பளைக்கும் ஆனையிறவுக்கும் இடையில் கண்டி வீதியில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பாக் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்

சீவன் தொலைத்தொடர்பகம்
G.P.S. றோட், கல்வியங்காடு.
T.P. 021 222 3303, 3731

எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (28376)(12)


# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சங்கரப்பிள்ளை (ஜே.பி.)

(ஓய்வுபெற்ற அதிபரும், முன்னாள் நெடுந்தீவு பல நோ.கூ.ச. தலைவரும்)

நெடுந்தீவு நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சங்கரப்பிள்ளை அவர்கள் 09.02.2004 திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் பாலகுமார்(சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), சுரேஸ்குமார் (ஹொட்லண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈயோன் (சுவிஸ்), கார்த்திகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமதுஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
(சி-33237)(36-40-12) மனைவி, மைத்துனர்கள்.

## மார்க்கண்டு கனகரத்தினம்

மானிப்பாய், ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கனகரத்தினம் அவர்கள் நேற்று (11.02.2004) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனோண்மணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான கனகலிங்கம், தர்மலிங்கம் மற்றும் இராசரத்தினம், அசுபதி தம்பிராசா, குணலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் காலை 11.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பெறாமகன் த. ஆனந்தரூபன்
(தர்மரூபன் பல்பொருள் வாணிபம்,
மானிப்பாய்)

*ஆனந்தா வீதி,*
*மானிப்பாய்.* (28397)(40-36-12)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



உயர்திரு. கந்தையா கனகரத்தினம் பளை தம்பகாமத்தைச் சேர்ந்த முதலாம்தர கிராம உத்தியோகத் தரும் பளை ஸ்ரீரங்க கானசபா ஸ்தாபகரும், சிறந்த நாடக ஆசிரியரும், சிறந்த நாடக நடிகரும், தலைசிறந்த சமூக சேவையாளரும் பளை கலை, கலாசார பேரவையின் செயலாளரும் தம்பகாமம நெளியாய் வீநாயக அம்பாள் நாக தம்பிரான் ஆலய பாபாலன சபையின போசகரும், நாடகத்துறையைப் பாராட்டி இந்து கலாசார அமைச்சினால் 'கலைஞானகேசரி' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்ட

**கந்தையா கனகரததினம் அவர்கள்**

11.02.2004 புதன்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இவரின் சேவைகள் மேலும் மேலும் சிறக்க மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.
நாகவி கிறீம் ஹவுஸ்.
133/10, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம.

(28392)(36-12-40)

**லக்சுமி** இணுவில்
சிம்பு, ஷர்மி நடித்த
**காதல் அழிவதில்லை** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே.) (28375)

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல நடித்த




காட்சிகள் : 11.00. 3.00. 7.00. (பு.நே.) (C/33048)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
**ஜெய்** (ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30,(பு.நே.)
18 முதல்
**எங்கள் அண்ணா**
(C-33050) (12)

**லிபேட்டி** அச்சுவேலி
விக்ரம், த்ரிஷா, விவேக், மனோரமா மற்றும் பலர் நடித்த
**சாமி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 3.00, 7.00. (பு.நே.) (C/33049)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
பாலா, ஷர்மி நடித்த
**காதல் கிசு கிசு** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.) (C-32981) (31)

# கிறிஸ்தவ மதத்தலங்கள் மீதான தாக்குதல் சூத்திரதாரிகள் கைது!

கொழும்பு,பெப்.12

கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வந்தனர் எனக் கூறப்படும் குழுவினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது இனம் தெரியாத நபர்களினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் எனக் கருதப்படும் 12 பேர் நேற்று முன்தினம் பொலஸாரினால் கைசெய்யப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.எச். ஜுனைட் தெரிவித்தார்.

வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுவந்த குழுவினர் பௌத்த அடிப்படை வாதிகள் என விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

அநுராதபுரம், கெப்பிட்டிக்கொல்லாவ பகுதியில் உள்ள வழிபாட்டுத் தலம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்ற சமயம் கைது செய்யப்பட்ட நான்கு பௌத்த பிக்குகள் கொடுத்த தகவலை அடுத்து இந்தக் குழுவினர் கைதுசெய்யப்பட்டனர் என்று கூறப்பட்டது.

## இருபாலைச் சந்தியில் கோஷ்டி மோதல்

கோப்பாய்,பெப்.12

இருபாலைச் சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கத்தி, பொல்லு, இரும்புக் கம்பிகள் சகிதம் பெரும் கோஷ்டி மோதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இருவருக்கு இடையில் ஏற்பட்ட பகையே விரிவடைந்து இந்த மோதலுக்குக் காரணமாக இருந்தது எனக் கூறப்பட்டது. (எ-72)

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கருத்து எதனையும் கூறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், மல்வத்த பீடாதிபதியை இந்தியத்தூதுவர் சந்தித்தபோது அவர் சில விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டார் என, கூறப்படுகிறது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையினால் இலங்கை மக்கள் மத்தியில் ஒரு' டென்சன்' ஏற்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்து வந்த பொருளாதார அபிவிருத்தியிலும் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். இப்படி தேர்தல் ஒன்றை நடத்தும்போது 75 கோடி ரூபாவுக்கு மேல் செலவிட நேரும்; இதனை நாடு தாங்காது. ஜனாதிபதியின் இந்தச் செயல் சிறிதும் பொருத்தமற்றதாகும். - இப்படி மல்வத்த பீடாதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதில் அளித்த இந்தியத் தூதுவர்:-

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையிடாது. இந்தியாவும் இலங்கையும் பாரம்பரிய கலாசாரத் தொடர்புகளைக் கொண்டவை. இதன் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும் - எனக் குறிப்பிட்டார் எனக் கூறப்பட்டது.

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டவாறே இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன எனவும் முன்னணியில் இடம்பெறும் ஏனைய கட்சிகளுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் எவ்வளவு என்பது அடுத்த சில தினங்களில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மாநாட்டில் விரிவாக ஆராயப்பட விருப்பதோடு, தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் அன்று ஆரம்பித்து வைக்கப்படலாம் எனவும் தெரிகிறது. இதற்கிடையே, ஐ.தே.க. முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கிறது. (ஐ)

## ஜி.சீ.ஈ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் மேற்கொள்ள முடியுமென எதிர்பார்ப்பதாக பரீட்சைத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.இப்பரீட்சை பின்போடப்படுவதால் ஏனைய பரீட்சைகளின் திகதிகளிலும் மாற்றம் செய்ய வேண்டியேற்படும் எனவும் அவர் கூறினார்.

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பை ஏற்று ஆட்சிக்கு வரக்கூடிய கட்சியோடு இணைந்து போட்டியிட்டு ஆட்சியில் பங்குகொள்ளும் வாய்ப்பைப்பெற்றால்தான் மலையக மக்களுக்கு நல்ல சேவைசெய்ய முடியும் என்கிறது இ.தொ.கா. இந்தக் கருத்தை இ.தொ.காவின் உப தலைவர் இரா.யோகராஜன் நேற்றுத்தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் உறுதிபட எடுத்துக்கூறினார்.

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் தாம் நேற்றுப் பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றிலும், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது மலையக மக்கள் முன்னணியின் நேரடித்தலைமையின் கீழ் செயற்பட முடியாது" என்று அறுதியிடக் கூறியிருக்கின்றார்.

அது மட்டுமின்றி, வடக்கு-கிழக்கு, மலையகம் போன்று மேல்மாகாணப் பிராந்தியத்தையும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருதவேண்டும்" என்று நிபந்தனையும் விதித்திருக்கின்றார்.

யோகராஜனும், மனோகணேசனும தெரிவித்துள்ள கருத்துக்கள் முழுமையாகத் தனித் தனித் செய்திகளாக 2ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மலையகத்தின் மீது முக்கியமான இ.தொ.காவும் கொழும்பில் நிலை பெற்றுள்ள மேல்மாகான மக்கள் முன்னணியும் கூட்டமைப்பில் சேர்ந்து இணைந்து போட்டியிட முன்வரவில்லையென்றால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கூட்டுப்போட்டித் திட்டம் முழு வெற்றிபெற முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


இடைக்காலத் தடை உத்தரவை, வழக்கு விசாரணை முடிவடையும் வரையிலான நிரந்தரத் தடை உத்தரவாகக் கொழும்பு நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது.

கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை 14 நாள்களுக்கு ஒரு தடவை நீடிக்கும் வகையில் நீதிமன்றம் பிறப்பித்து வந்தது.


நேற்று இந்த வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், இடைக்காலத் தடை உத்தரவை வழக்கு விசாரணை முடியும் வரையிலான உத்தரவாக மாற்றும் கட்டளையை நீதிபதி பிறப்பித்தார்.

வழக்கு மார்ச் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.


## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு
**அம்பிகா அம்மா**
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
**கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.**



உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றியும் சுபீட்சமும் அடையவும் அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும். எல்லா நாள்களிலும் (ஒவ்வொரு நாளும்) சாஸ்திரம் சொல்லப்படும்.

**அம்மாவைச் சந்திக்கும் இடம் :**

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**
**121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில் பெரிய கடை சந்திக்கும் ஸ்ரான்லிச் சந்திக்கும் இடையில்).

(28395)(39-17-12)


# உதயசூரியன் சின்னத்தை கூட்டமைப்பு பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம்!

## ஆனந்தசங்கரி பி.பி.ஸிக்குப் பேட்டி

லண்டன்,பெப்.12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமாகிய உதயசூரியன் சின்னத்தைப் பயன்படுத்தி தமிழர் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படலாம்.

இவ்வாறு நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த விசேட பேட்டியில் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின சின்னத்தை தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்த முடியாது என்ற நிலை உள்ளதா? என பி.பி.ஸி. செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்தக் கூட்டமைப்பானது எமது கட்சியின் அங்கிகாரம் இல்லாமல் விரிந்து செல்கிறது. இது எமக்குள்ளேயே குழப்பத்தைக் கொண்டு வரலாம்.

எமது கட்சி பிளவுபடவேண்டிய தேவை இல்லை. இதில் சம்பந்தப்பட்டவர்கள் நான்கு, ஐந்து பேர்தான.

விடுதலைப் புலிகளுக்கு மாறுபடடவனாக நான் இருக்கவில்லை. விடுதலைப் புலிகளுடன்தான் பேச வேண்டுமென நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.

இந்தக் கட்சியை ஆரம்பகாலத்திலிருந்தே நான் கட்டி வளர்த்தவன. சட்டத்தை, என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தவர்களுக்கு விளங்கப்படுத்தவே நான் நீதிமன்றம் சென்றேன்.

கூட்டமைப்பின் கூட்டங்களில் கூட்டணிச் செயலாளர் நாயகம் கலந்துகொண்டு தீர்மானங்களை எடுப்பது கூட நீதிமன்றத் தடைக்கு முரணானதுதான் என நான் கருதுகிறேன். தேர்தல் தொடர்பாகக் கூட்டமைப்பில் எடுக்கப்படும் முடிவுகள் என்னையும் கட்டுப்படுத்தாது. எனது கட்சியையும் கட்டுப்படுத்தாது -என்றார். (எ-8)

# சகல இடங்களிலும் ஐ.தே.மு. வெல்லும்! நான்கு மாவட்டங்களில் மட்டுமே போட்டி!!

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு,பெப்.12

ஐக்கிய தேசிய முன்னணி சகல மாவட்டங்களிலும் வெற்றிவாகை சூடும். ஆக நான்கு மாவட்டங்களில் மாத்திரமே தமது தரப்புக்குப் போட்டி இருக்கிறது என்று அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று மாலை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பு அரசாங்கப் பேச்சாளர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியாதாவது :-

நானும் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் நாட்டைவிட்டு ஓடிவிட்டோம் என இங்கு செய்திகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. நான் எனது நண்பரொருவரின் புதல்வியின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளவே இந்தியா சென்றேன். அங்கிருந்தபோது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிந்தேன். உடனேயே திருப்பதிக்குச் சென்று வெங்கடாசலபதியை வழிபட்டேன். ஜனாதிபதிக்கு நல்ல புத்தியைக்கொடு என்றும் வேண்டிக்கொண்டேன்.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.முன்னணிக்கு பெரும்பான்மை இருக்கும் நிலையில் ஜனாதிபதி நடாளுமன்றததைக் கலைத்தார். வரவு - செலவுத் திட்டம் 38 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதனால் மக்களுக்குக் கிடைக்கவிருந்த தொழில் வாய்ப்புகள், பொருளாதார நன்மைகள் போன்றவை ஜனாதிபதியால் தடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியால் அமைச்சர்களுககும் அரசுக்கும் நாட்டுக்கும் பெரும் தொல்லையாக இருக்கின்றது.

தனது கணவரைக் கொலைசெய்த கொலை வெறியர்களுடன்இணைந்து அவர் ஆட்சியைப் பிடிக்க முடியுமெனக் கனவு காண்கின்றார்.

ஏப்ரல் 2ஆம் திகதி இந்நாட்டிலுள்ள பேய்களை விரட்டியடித்து நாம் வெற்றிவாகை சூடி தமிழ் - சிங்களப் புதுவருடத்தைக் கோலாகலமாகக் கொண்டாடுவோம். இவ்வாறு அவர் சொன்னார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியதாவது:-

அமைச்சரவையில் அனுமதிபெற்றே நான் வெளிநாடு சென்றேன். வெளிநாடுகளில் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்காக முதன் முதலாகத் தாய்லாந்து சென்றேன்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவில்லை. இதனால் எமது நாட்டுக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## ஐ.ம.சு.முன்னணியில் சமசமாஜக் கட்சி இணையாது!

கொழும்பு,பெப்.12

சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டணியிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் லங்கா சமசமாஜக்கட்சி இணையாது என்று அக கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை எமது கட்சி கொண்டிருக்கிறது. ஆனால், அதிகாரப் பரவலாக்கலை ஜே.வி.பி. எதிர்த்து வருகின்றது. அதனாலேயே ஐ.ம. சுதந்திர முன்னணியில் இணைவதில்லை என்ற தீர்மானத்தை லங்கா சமசமாஜக் கட்சி எடுத்திருக்கிறது என அவர் மேலும் கூறினார்.

நேற்று கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பட்டிவீரக்கோன் இவற்றைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஐ.தே.மு.அரசை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்துவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு லங்கா சமசமாஜக் கட்சி ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் கூறினார்.

# எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சமாதான முயற்சி தொடர வேண்டும்

## ஈ.பி.டி.பி. தரப்பில் இருந்து வேண்டுகோள்

கொழும்பு,பெப்.12

எதிர்வரும் பொதுத் தேர்தலையடுத்து எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சமாதான முன்னெடுப்புகள் தொடர வேண்டும். அரசியல் பன்மைதத்துவம், ஜனநாயகம், மனித உரிமைகள் என்பன பேணப்பட வேண்டும். இதற்காக சர்வதேச சமூகம் ஊடாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரியவாறு அழுத்தம் கொடுக்கத்தக்க வகையில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்தத் தேர்தலின்போது சிந்தித்து செயற்பட வேண்டும்.

- இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) சர்வதேச பிராந்தியங்களினது ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது கட்சியின் வெளிநாட்டுக் கிளைகள் ஒன்றிணைந்து நடத்திய கலந்துரையாடல்களை அடுத்து, கூட்டாக விடுத்த வேண்டுகோள்களிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் காரணமாக சமாதான முயற்சிகளை முடக்கிவிடக் கூடாது என்றும் சமாதானத்துடன் இரண்டறக் கலந்ததாக அரசியல் பன்மைத்துவம், ஜனநாயகம், மனித நேயம் என்பவையும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.கல்வி வலயத்தின் சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களான திருமதி பா.சுப்பிரமணியம், க.செல்வப்பிரகாசம் ஆகியோரின் சேவை நலன் பாராட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (எ-8)

## அம்பாறை மாவட்டத்துக்கு இம்முறையும் 7 எம்.பிக்கள்

கொழும்பு,பெப்.12

அம்பாறை மாவட்டத்திற்கான எம்.பிக்களின் தொகை இம்முறையும் ஏழாகவே இருக்கும். அந்த எண்ணிக்கை குறைக்கப்படவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலின் போது ஏழு எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டனர். இம்முறை ஓர் ஆசனம் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.


**மதுபாரத்**
இந்துமகளிர் ஒழுங்கை

A/L 2006

TAMIL
S.சிவா

LOGIC
P.கமல்

Sat., Sun. 7 a.m. (O.T)
★அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(28393)(37)



**ஏ.சன்**
கல்வி நிலையம்

பௌதிகவியல்
A/L 2005
மின்னியல்
SAT., SUN .5.00 p.m.
திரு.குமரன் (B.Sc.)
ஆரம்பம்: 14.02.04 (Sat.)
5.00 p.m.

(28321)(32)


## மரண அறிவித்தல்

### அப்புத்துரை வேதநாயகி (ராணி)

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை வேதநாயகி (ராணி) நேற்று (11.02.2004) புதன்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொட்டிலடி, சங்கானையில் உள்ள அவரது மகன் வேல்முருகானந்தன் வீட்டில் இன்று (12.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி தொட்டிலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தொட்டிலடி,*
*சங்கானை.* (28398)(37-38-12-32)

தகவல்:
போஜன் அர்த்தநாரீஸ்வரி (மகள்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.